வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 10.06.2023 சனிக்கிழமை | இதழ் : 183 | பக்கங்கள் : 16




## கனடா பிரகடனத்தை ஏனைய நாடுகளும் அங்கீகரிக்கலாம்!

### அச்சப்படுகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் இனப் படுகொலைகள் இடம் பெற்றன என்ற கனடா வின் பிரகடனத்தை ஏனைய நாடுகளும் அங் கீகரிக்கலாம். கனடாவின் அரசியல்நோக்கம் கொண்ட பொய்யை எதிர்கொள்வதற்கு அர சாங்கம் நடவடிக்கை களை எடுக்கவேண்டும் என்று கூறியுள்ளார் சரத் வீரசேகர எம். பி.

முன்னாள் கடற்படை தளபதியின் தலைமையில் நேற்றுமுன்தினம் தேசிய பார்வை தொடர்பான கண்காணிப்பு குழுக் கூட் டத்திலேயே சரத் வீர சேகர இதனை தெரிவித் துள்ளார். அங்கு கருத்துத் தெரிவித்த சரத் வீரசேகர,

அமைச் சரவையின் அனுமதியை பெற்ற பின்னர், இலங்கை யில் இனப் படு

15

## யாழில் தனியார் வகுப்புகளுக்கு வெள்ளி, ஞாயிறு நாட்களில் தடை

### அரச அதிபர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை யான மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமை மாலை யும் ஞாயிற்றுக்கிழமை முழுநேரமும் தனியார் கல்வி நிலையங்கள் வகுப் புகளை நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் ஜூலை முத லாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவ பாலசுந்தரன் தலைமை யிலான தனியார் கல்வி நிலையங்களின் உரிமை யாளர்கள், கல்வியியலா ளர்கள், சமூக ஆர் வலர்கள் பங் கேற்ற நேற்றைய

15

## கைபேசிகளின் விலை 20 வீதத்தால் குறையும்!

கொழும்பு, ஜூன் 10

கைபேசிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங் களின் விலையை சுமார் 20 வீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கைபேசி இறக்கு மதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியா ளர் சந்திப்பில் சங்கத்தின் தலைவர் சமித் செனரத் இதனை தெரிவித்தார்.

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் பெறு மதி வலுப்பெற்று வரும் நிலையில் இதன் பலனை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

# நல்லிணக்க செயல்திட்டங்களை வேகப்படுத்த ஜனாதிபதி பணிப்பு



**கொழும்பு, ஜூன் 10**

**நல்லிணக்கத்துக்கான செயல்திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான சட்டங்கள் தயாரிப்பதை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**

நல்லிணக்கத்திற்கான செயல்திட்டம் தொடர் பில் ஜனாதிபதி பணிம னையில் நடந்த சந்திப்பி லேயே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங் கினார் என்று அவரின் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

சட்ட வரைவு, நிறு வன நடவடிக்கைகள், காணிப் பிரச்னைகள், கைதிகளை விடுதலை செய்தல், அதிகார பர வலாக்கம் ஆகிய 05 பிர தான பகுதிகளின் கீழ் நடைமுறைப் படுத்தப் பட்ட வேலைத்திட்டங் களின் முன்னேற்றம் தொடர்பில் இங்கு மீளாய்வு செய் யப்பட்டது.

உண்மை மற்றும் நல் லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல், தேசிய காணி சபை ஒன்றை நிறு

15

## டெங்கு, கோவிட் நோய்களை கட்டுப்படுத்த இரு குழுக்கள்

### ஜனாதிபதி ரணில் நியமித்தார்

கொழும்பு, ஜூன் 10

டெங்கு, கோவிட் 19 போன்ற நோய்களை கட் டுப்படுத்த அவசர நட வடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சர்கள், நிபுணர் கள் என இரு தனியான குழுக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குண வர்த்தன தலைமையி லான அமைச்சர்கள் குழு வில் அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் உட்பட 8 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

நாட்டில் கோவிட்-19 மற்றும் டெங்கு நோய்க ளைக் கட்டுப்படுத்துவ தற்கு அவசர நடவடிக் கைகளை மேற்கொள்ள அமைச்சர் குழு பணிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, சமன் ஏக்கநாயக்கவால் நிபுணத் துவம் பெற்ற 11 பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்

15



## பூசகர்கள் வேறுபாட்டால் தடைப்பட்ட வீரமாகாளி அம்மன் கொடியேறியது!

யாழ்ப்பாணம், ஜூன் 10

பூசகர்களின் முரண் பாட்டால் தடைப்பட்ட பிரசித்தி பெற்ற வண்ணை. வீரமாகாளி அம்மன் ஆலய பெருந்திருவிழா நீதிமன்ற உத்தரவின்பே ரில் நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இதேநேரம், ஆலயத் தின் திருவிழாவை குழப்பு பவர்களை கைது செய்ய மாறும் யாழ்ப்பா ணம் நீதிவான் நீதி மன்ற நீதிவான்

15

### பரிந்துரையை மீறி;

## சிறீ லங்கா ரெலிகொம்மை தனியார் மயப்படுத்த முடிவு

கொழும்பு, ஜூன் 10

சிறீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் சீர்திருத் தத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்பு குழு பரிந்துரைத்த போதி லும் அதனை சீர்திருத்த நடவடிக்கை எடுக்க அர சாங்கம் தீர்மானித்துள்ள தாக அமைச்சர் ஒருவர் கூறினார் என்று தென் னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட் டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பி னர் சரத் வீரசேகர தலை மையிலான துறைசார் மேற்பார்வை குழு சிறீ லங்கா ரெலிகொம் நிறு வனத்தை தனியார் மய மாக்க வேண்டாம் என பரிந்துரை செய்தி ருந்தது.

ஆனால், "துறை

15

### சிபெற்கோ, ஐ. ஓ. சியின் இயலாமையே

## 3 நாடுகளின் நிறுவனங்களுக்கு எரிபொருள் சந்தை வாய்ப்பு!

கொழும்பு, ஜூன் 10

இலங்கை பெற்றோ லிய கூட்டுத்தாபனமும் (சிபெற்கோ) இந்திய எண்ணெய் நிறுவனமும் (ஐ. ஓ. சி.) போதிய அந் நியச்செலாவணியை வழங்குவதற்கான இயலு மையை கொண்டிருக்க வில்லை. இதனாலேயே சீனா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா நாடுக ளின் நிறுவனங்களுக்கு எரிபொருள் இறக்குமதி மற்றும் சந்தை வாய்ப்பு வழங்கப்பட்டது என்று அரசாங்கம் தெரிவித் துள்ளது.

இந்த தெளிவுபடுத்த லுக்கு அமைய, கடந்த வருடம் எரி பொருள் நெருக்

15

## யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் காணிகளை விடுவிக்க தீர்மானம்!

கொழும்பு, ஜூன் 10

யாழ்ப்பாணம், கிளி நொச்சி மாவட்டங்களில் வனவள பாதுகாப்பு, வன ஜீவராசிகள் திணைக்களங் களால் அடையாளப்படுத் தப்பட்ட காணிகளில் கணிசமானவற்றை விரை வில் விடுவிக்கத் தீர்மா னிக் கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா வின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பாராளுமன் றக் கட்டடத் தொகுதி யில் நடைபெற்ற வனவ ளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் பாது காப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் குறித்த அமைச்சு அதிகா ரிகளுடனான சந்திப்பின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

நாட்டு மக்க

15

# கருவியின் தசவிழா

யாழ்ப்பாணம், ஜுன் 10
கருவி மாற்று திறனாளிக ளின் சமூகவள நிலையத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருவி நிறுவனத் தலைவர் க. தர்மசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன், சிறப்பு விருந்தினராக வட மாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் செல்வி அகல்யா செகராஜா, கௌரவ விருந்தினர்களாக வலி காமம் கல்வி வலய உதவிக்கல் விப் பணிப்பாளர் சுப்ரமணியம் ஸ்ரீகுமரன் கருவி (SRDA)- ஐக் கிய இராச்சியம் அறங்காவலர் சபைத் தலைவர் சிவா ஜி சேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கருவியின் 10 ஆண்டு செயல்பாடுகள் தொடர்பான விடயங்கள் மற் றும் அனுபவங்கள் என்பன இந் நிகழ்வில் நினைவு கூறப்படவுள் ளன. இந்த நிகழ்வில் 'பயணத் தின் நாட்கள்' எனும் கருவி நிறு வனத்தின் 10ஆண்டு ஆவணத் தொகுப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (ஐ)

# குடும்பஸ்தர் சடலமாக மல்லாவியில் மீட்பு!

முல்லைத்தீவு, ஜுன் 10
மல்லாவி, வடகாடு வயல் பகு தியில் இருந்து சடலம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை மீட் கப்பட்டது. காலையில் வயலுக்கு சென்றவர்கள் வழங்கிய தகவ லின் அடிப்படையில், குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொல்லவிளாங்குளம் - வவு னிக்குளம் பகுதியை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தை ஒருவரே சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரி ழந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள நிலை யில், இது தொடர்பான மேல திக விசாரணைகளை மாங்கு ளம் பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# சீன பசளை கணக்காய்வு அறிக்கையை அரசாங்கம் திட்டமிட்டு தாமதிக்கின்றது

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 10
சீனாவிலிருந்து சேதன பசளை கொண்டுவர எடுத்த நடவடிக்கையால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டத்தை சரிசெய்வ தற்கு அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. அது தொடர்பான கணக்காய்வு அறிக்கையையும் திட்டமிட்டு தாமதித்து வரு கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற் றொன்றை முன்வைத்து உரை யாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், சீனாவில் இருந்து சேதனப்பசளை கொண்டுவருவ தற்காக அரசாங்கம் 6.9 மில் லியன் அமெரிக்க டொலர் களை செலுத்தி இருந்தது. என்றாலும் உரமும் இல்லை. பணமும் கிடைக்கவில்லை. வங்கியில் பணம் செலுத்திய மையால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் நடவ டிக்கை எடுக்கப்படவும் இல்லை. இது தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கை யில் அனைத்து விடயங்களும் இருக்கின்றன.

அதனால் இந்த பணத்தை மீள பெற்றுக்கொள்ள அரசாங் கம் எடுக்கும் நடவடிக்கை என்ன? எப்போது இதனை மேற்கொள்வது என கேட்கி றேன். இதேபோன்று இந்தியா வின் குஜராத் மாநிலத்தில் விவசாய நிறுவனம் ஒன்றில் இருந்து 21இலட்சம் லீற்றர் நனோ நைதரசன் திரவ உரம் பிழையான முறையில் முற்பதிவு செய்திருக்கிறது. இதுதொடர் பாக அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ள இதனை பாரா ளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக கணக்காய்வாளர் நாயகம் தெரி வித்திருந்தபோதும் இதுவரை அவ்வாறான எந்த நடவடிக் கையும் இடம்பெறவில்லை.

நனோ நைதரசன் திரவ உரம் 500 மில்லி லீற்றரை இந்தியா 3 டொலர் 23 சதத்துக்கு கொள் வனவு செய்துள்ளபோதும் இலங்கை 12 டொலர் 45 சத் துக்கு கொள்வனவு செய்திருந் துள்ளது. அப்படியாயின் 500 மில்லி லீற்றருக்காக இந்தி யாவை விட 1867 ரூபாய்



மேலதிகமாக செலுத்தி இருக்கிறது. அதன் பிரகாரம் இதனால் ஏற்பட்ட முழு மேலதிக செலவு 7.8 பில்லிய னாகும்.

அதனால் நனோ நைதரசன் உரம் மோசடி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? அது தொடர்பான அறிக்கை எங்கே? ஏன் அந்த அறிக்கையை பாராளுமன்றத் துக்கு சமர்ப்பிக்காமல் இருக் கிறது.

இந்த மோசடிகாரர்கள் யார்? எனவே 2019இற்கு பின் னர் நாட்டில் 40 இலட்சம் பேர் வறுமை நிலைக்கு தள்ளப்பட் டுள்ள நிலையில் கழிவு உரம் மற்றும் நைதரசன் உரம் ஊடாக மோசடி செய்தவர் களை சட்டத்துக்கு முன் நிறுத் துவதற்கும் ஏற்பட்ட பாதிப் புக்கு நட்டஈடு பெற்றுக்கொள் ளவும் நடவடிக்கை எடுக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஐ)

# கொழும்பு மாநகர சபையின் வருமானம் ரூ. 6,280 மில்லியன்

கொழும்பு, ஜுன் 10
கொழும்பு மாநகர சபையின் 2022ஆம் ஆண்டின் வருமான நிலுவை 6,280.50 மில்லியன் ரூபாய் என அரசாங்க கணக் குகள் பற்றிய குழுவில் (கோபா) புலப்பட்டது.

கொழும்பு மாநகர சபையின் 2020ஃ2021 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் விசாரணை செய்வதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா) அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் பாராளுமன்றத்தில் அண்மை யில் கூடிய போதே இந்த விட யம் தெரிய வந்தது.

இதன்போது, 2021 ஆம் ஆண்டின் மொத்த நிலுவை வருமானம் 5,835.6 மில்லியன் ரூபாய் எனவும், 2020 இல் 5,386.4 மில்லியன் ரூபாய் என வும் 2019 இல் 4,481.5 மில்லி யன் ரூபாய் எனவும் இதன்போது புலப்பட்டது. இவற்றில் வரி கள், வாடகைகள் மற்றும் ஏனைய வரிகள் என்பன நிலு வையாகக் காணப்படுவதாக இதன்போது இனங்காணப் பட்டது.

அதற்கமைய, நிலுவை வரி கள் காணப்படும் சொத்துக்களை கையகப்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அத்துடன், ஒரு சில சொத்துக்களின் உரி மையாளர்களை அடையாளம் காண்பதில் சிக்கல்கள் காணப் படுவதாகவும், மாநகர சபையில் இது தொடர்பில் செயற்பட வேண்டிய அதிகாரிகளின் பற் றாக்குறை நிலவுவதும் இந்த நிலுவைகளை அறிவிடுவதில் சிக்கல் எழுந்துள்ளதாக அவர் கள் குறிப்பிட்டனர்.

சட்டரீதியற்ற நிர்மாணங்க ளுக்கும் வரி இலக்கம் வழங்கப் பட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர். அதற்கமைய, 2023 ஜுலை 23 ஆம் திகதிக்குள் நிலு வைகளை அறிவிடுவதற்கான திகதிகளுடன் கூடிய வேலைத் திட்டமொன்றை தயாரித்து முழுமையான அறிக்கை யொன்றை கோபா குழுவுக்கு வழங்குமாறு குழு பரிந்து ரைத்தது.

அத்துடன், வாகனத்தரிப் பிட கட்டணங்களை அறவிடு வதற்காக ஒப்பந்தம் செய்து கொண்ட தனியார் நிறுவனங் களினால் மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய மாதாந்த வாடகைக் கட்டணத்தை செலுத்தாமல் தொடர்ந்தும் கைவிடப்பட்டிருப்பதாகவும், 2021 டிசம்பர் 31 வரை 38 நிறு வனங்களிடமிருந்து அறவிடப் படவேண்டிய நிலுவைத் தொகை 265 மில்லியன் ரூபாய் எனவும் இதன்போது புலப்பட்டது.

மேலும், கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் இந்தப் பிரிவின் சேவையைப் பாராட்டுவதாகவும் இது இலங்கை பூராவும் பரவல டைய வேண்டும் எனவும் கோபா குழுவின் தலைவர் தெரிவித்தார். அத்துடன், 20 மாடிகள் உயரம் கொண்ட கட்டடங்களில் தீயணைப்பு செய்ய இந்தப் பிரிவுக்கு வசதி கள் காணப்படுவதாக இதன் போது குறிப்பிடப்பட்டது. 20 மாடிகளை விடவும் உயரமான கட்டடங்களில் தீ விபத்து ஏற் பட்டால் விமானப் படையின் உதவியை பெறுவது முக்கிய மானது என குழுவின் தலைவர் லசந்த அழகியவண்ண தெரிவித் தார். அதனால் விமானப்படை யுடன் ஒருங்கிணைப்பை அதிகரித்துக்கொள்ளுமாறு குழுவியுன் தலைவர் ஆலோ சனை வழங்கினார். மேலும், தீயணைப்பு பிரிவில் காணப் படும் வெற்றிடங்கள் தொடர்பி லும் இதன்போது கலந்து ரையாடப்பட்டது.

அத்துடன், விளம்பர வருமா னங்களை முறையாகப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்து ரையாடப்பட்டது. அதற்க மைய, இதற்கான முறையான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் அவசி யம் மற்றும் அதனை முறை யாகக் கண்காணிக்கும் அவசி யம் என்பன தொடர்பில் குழு வின் தலைவர் சுட்டிக்காட் டினார்.

கொழுப்பு 07 பகுதியில் காணப்படும் காணியொன் றுக்கு வரி செலுத்துவது கைவிடப்பட்டுள்ளமை மற்றும் காணி ஆவணங்களை முறை யாகப் பேணிவராமை தொடர் பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. அதற்க மைய, இது தொடர்பான முழு மையான அறிக்கையொன்றை ஜுலை 06 ஆம் திகதிக்குள் கோபா குழுவுக்கு வழங்குமாறு குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார். அத்துடன், மேல் மாகாண மகாநகர ஆணையா ளர் அலுவலகத்தின் பலவீன மான கண்காணிப்பு செயற்பாடு கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும், கொழும்பு நகரில் கழிவு நீர் முகாமைத்துவ திட் டம் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்ட துடன், எதிர்வரும் 21ஆம் திகதி இது தொடர்பில் கலந்துரையா டுவதற்கு கோபா குழு கூடவுள் ளது. அன்றைய தினம் இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் குழுவின் முன்னிலையில் அழைப்பதாக கோபா குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (ஐ)

# வவுனியாவில் விபசாரத்தில் ஈடுபட்ட ஏழு பெண்களுக்கு தொற்றுநோய்!

## உறவுகொண்டோரை சோதிக்குமாறு அறிவுறுத்தல்

வவுனியா, ஜுன் 10
வவுனியாவில் பாலியல் தொழில் ஈடுபட்டனரென கைது செய்யப்பட்ட பெண்களிடம் மேற்கொண்ட மருத்துவ பரிசோதனையில் 7 பேருக்கு கொனோறியா மற்றும் ஷர்ப்பீஸ் நோய் தொற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் நேற்று தெரிவித்துள்ளனர்.

இந்த நோய்கள் பாலியல் உறவின் மூலம் தொற்றாளரிடம் இருந்து பிறருக்கு பரவக் கூடியதாகும். குறித்த 7 பாலி யல் தொழிலாளிகளும் வவுனியா நகரம் மற்றும் தேக்கவத்தை ஆகிய பகுதியில் விபசாரத் தொழில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

எனவே, அவர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் உடனடியாக வவுனியா மருத்து வமனையின் பால்வினை நோய் தடுப்பு பிரிவுக்கு சென்று தம்மை மருத்துவ பரிசோத னைக்கு உட்படுத்திக் கொள்ளு மாறும் சுகாதார பிரிவினரால் கோரப்பட்டுள்ளது. (ஐ)

# கொழும்பு துறைமுக நகரம் சீனா - இலங்கை உறவுக்கு பலம்!

## பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 10
கொழும்பு துறைமுக நகரம் சீனா - இலங்கை உறவுகளை பலப்படுத்துகிறது என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித் துள்ளார்.

சீனாவின் சி. ஜி. ரி. என் ஊடகத்துக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்ட வாறு கூறினார்.

அத்துடன், கொழும்பு துறைமுக நகரம் ஒரு பெரும் முதலீட்டு வலயமாக இருக்கும். ஏனெனில், இது நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் சர்வ தேச சமூகத்துடன் பரிவர்த்த னைகளை மேற்கொள்வதற்கும் உதவும்.

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி என்பது ஒரு முக் கிய முன்னேற்றமாகும். இதற் காக சீனா - இலங்கைக்கு ஆதர வாக முன்முயற்சி எடுத்துள் ளது. கொழும்பு இலங்கையின் தலைநகரம். 500 ஆண்டுகளுக் கும் மேலான வர்த்தக தலைநக ரம். எனவே, சர்வதேச அளவில் இது இலங்கைக்கு முக்கியமா னது. கொழும்பு துறைமுக நக ரம் கொழும்பு நகரத்தின் ஒரு பகுதியாகும்" எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சீன முதலீட்டு மற்றும் சீன அபிவிருத்தி திட்டங்களின் மூலம் கடல்நீரில் நிரம்பியிருந்த பிரதேசத்தை துறைமுக நகர அபிவிருத்தியாக கட்டடங்கள் வரும் தீவாக மாற்றியுள்ளதாக வும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
10.06.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இடைக்கால நிர்வாக சபையென்பது ஒரு பொய்?

இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சு திருப்தியளிப்பதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார். விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சு இடம்பெற்ற காலத்தில் இடைக்கால நிர்வாக சபை யோசனை ஒன்றை அவர்கள் முன்வைத்திருந்தனர். இடைக்கால நிர்வாக சபையென்று பொதுவாக பேசுகின்றபோது விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டது போன்றதொரு யோசனையை விக்னேஸ்வரன் முன்வைக்கிறாரெனவும் அதனை மற்றவர்களும் ஆதரிக்க வேண்டுமென்னும் கருத்து மக்கள் மத்தியில் சென்றடையக் கூடும். உண்மையில் இது அடிப்படையிலேயே தவறானது. விக்னேஸ்வரனும் விடயங்களை பொய்யாக முன்வைக்கக்கூடாது. மக்களுக்கு உண்மைகளைக் கூறி, தனது நிலைப்பாட்டை முன்வைக்கலாம் – அதில் தவறில்லை.

தற்போது பேசப்படுவது இடைக்கால நிர்வாக சபை விவகாரமல்ல. அவ்வாறாயின் இப்போது பேசப்படுவது என்ன? மாகாண சபை தேர்தலை அரசாங்கம் தொடர்ந்தும் பிற்போட்டுவரும் நிலையில் மாகாண சபை தேர்தல் இடம்பெறும் வரையில் ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மகாண சபையை மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல், ஆலோசனை சபையொன்றின் மூலம் நிர்வகிப்பதற்கான விடயங்கள் தொடர்பிலேயே விக்னேஸ்வரன் பேசிவருகின்றார். ஏற்கனவே, விக் னேஸ்வரன் உள்ளடங்கலாக இன்னும் சில சிறிய கட்சிகளும் இணைந்து குறித்த ஆவணத்தில் கையெழுத்திட்டிருக்கின்றன.

இது நடைமுறைக்கு வருமாக இருந்தால் மாகாண சபை தேர்தலை தொடர்ந்தும் பிற்போடுவதற்கான வாய்ப்பை அரசாங்கம் பெறும். தமிழரசு கட்சியுடன் இடம்பெற்ற பேச்சின் போதும், ரணில் விக்கிரமசிங்க மாகாண சபை தேர்தலை தான் நடத்தப் போவதில்லையென்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆலோசனை சபையொன்றை அமைப்பது தொடர்பிலேயே தான் சிந்திக்கிறார் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். சி. வி. விக்னேஸ்வரன் ஏன் இந்த விடயத்தில் இந்தளவு ஆர்வம் காண்பிக்கின்றார் என்பதும் தெரியவில்லை.

ஆனால், விக்னேஸ்வரன் கூறுவது போன்று அவ்வாறானதோர் ஆலோசனை சபை உருவாக்கப்படுமாக இருந்தால் அதில் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் நிச்சயம் இடம்பெறுவர். விக்னேஸ்வரன் கூறுவது போன்று, பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறுவதற்கு குறித்த ஆலோசனை சபை பயன்படுமென்று கூறுவது சற்று மிகைப்படுத்தப்பட்ட கருத்தாகும். ஒருவேளை அவ்வாறு சில விடயங்கள் இடம்பெற்றாலும்கூட, மாகாண சபைக்கான மக்கள் தலைமைத்துவம் இல்லாத போது, விடயங்களை முன்னெடுப்பது இலகுவானதென்று வாதிடுவதற்கான வாய்ப்பாகவும் அது அமையக் கூடும்.

ஜனாதிபதி அவ்வாறானதோர் ஆலோசனை சபையை நியமிக்க விரும்பினால் அதனை அவர் செய்யலாம். அதனை தமிழ் கட்சிகளால் தடுக்க முடியாது. ஆனால், அதற்காக அதனை இடைக்கால நிர்வாக சபையென்று பொய்யாக மக்கள் மத்தியில் பரப்ப முற்படுவதே தவறானது. விக்னேஸ்வரன் பொய்களை பரப்ப முற்படக்கூடாது.

இடைக்கால நிர்வாக சபை என்பதன் பொருள் மிகவும் கனதியானது. அதாவது, ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்படும் வரையில் குறிப்பிட்ட காலத்துக்கு இடைக்கால ஏற்பாட்டின் அடிப்படையில் சில உடன்பாடுகளுக்கு வருவதாகும். அவ்வாறானதோர் இடைக்கால நிர்வாக சபைக்கான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான பலத்துடன் தமிழர் தரப்பு இல்லை. இந்த நிலையில் மாகாண சபையை நிர்வகிப்பதற்கான ஆலோசனை சபையை இடைக்கால நிர்வாக சபையென்று வாதிட்டால், நிரந்தரமான தீர்வு மாகாண சபையாகத்தானே இருக்க முடியும்.

# சந்தேகநபர் அடித்து கொலை; 7 பொலிஸார் சி. ஐ. டியால் கைது!

*கொழும்பு, ஜூன் 10*

*நாரஹன்பிட்டி - அல்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள தொழில் பயிற்சி அதிகார சபையின் உதவி முகாமையாளரை தாக்கி கொலை செய்த பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் உட்பட 7 பொலிஸார் சந்தேகத்தின் பேரில் குற்றப்புலனாய்வு பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*ஹிக்கடுவை தெல்வத்த பகுதியைச் சேர்ந்த சமந்த ப்ரீத்தி குமார என்ற 41 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.*

*ஜனவரி 10ஆம் திகதி இரவு கொழும்பு தாமரை கோபுரம் அருகே பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் குழுவினால் ப்ரீத்தி குமார கைது செய்யப்பட்டார்.*

*போதைப்பொருள் வியாபாரி எனக் கூறி அவர் கொடூரமான முறையில் தாக்கப்பட்டமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*தாக்குதலுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் இருந்த ப்ரித்தி குமார கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் உயிரிழந்தார்.*

*இரகசிய பொலிஸார் நடத்திய விசாரணையில் அவருக்கும் போதைப்பொருள் கடத்தலுக்கும் தொடர்பு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது.*

*(ஐ)*

# தேசிய பாதுகாப்பு கண்காணிப்பு குழு உறுப்புரிமையை துறந்தார் பொன்சேகா

*கொழும்பு, ஜூன் 10*

*ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தேசிய பாதுகாப்புத் துறை கண்காணிப்பு குழுவின் உறுப்புரிமையில் இருந்து விலகியுள்ளார் என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.*

*இதன்படி தெரிவுக்குழுவால் அந்த வெற்றிடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் பிரதி சபாநாயகர் தெரிவித்தார்.*

# பெரியபுராண சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஜூன் 10*

*சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருக்குணானந்த குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராண சிறப்பு சொற்பொழிவும், மாதாந்த நாயன்மார் குருபூசை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.*

*சாவல்கட்டு - ஆனைக்கோட்டை - அந்திக்குழி ஞான வைரவர் காளி அம்பாள் தேவஸ்தான பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீகவிருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவு ரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார்.*

*சேக்கிழார் பெருமான், திருநாவுக்கரசர் குருபூசையைத் தொடர்த்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தொடர்ந்து, ‘என் கடன்பணி செய்து கிடப்பதே’ என்னும் விடயப் பொருளில் இளம்சைவப் புலவர் ச. நவநீதன் சொற்பொழிவாற்றுவார். நிறைவில், மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.*

*இதைத் தொடர்ந்து ஆன்மீகவிருந்தினர் உரையும் குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி- வினா போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாரட்டுப் பரிசில்களும் வழங்கப் படஉள்ளன.*

*(ஐ)*

# “ஸ்மார்ட் மின்மானி உற்பத்தி இந்த ஆண்டு ஆரம்பமாகும்!”

*கொழும்பு, ஜூன் 10*


*இலங்கையில் ஸ்மார்ட் மின் மானிகளை உற்பத்தி இந்த ஆண்டு ஆரம்பிக்கப் படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.*

*எல். இ. சி. ஓ. நிறுவனத்தின் துணை நிறுவனமான எல். இ. சி. ஓ. மீற்றரிங் நிறுவனம் வருடாந்தம் இரண்டரை இலட்சம் மின்மானிகளை உற்பத்தி செய்கிறது.*

*மேலும், இந்த நிறுவனம் இந்த ஆண்டு 3 வழி மற்றும் ஸ்மார்ட் மின்மானி உற்பத்தியை விரிவுபடுத்தும் என தெரிவித்துள்ளார்.*

*மேலும், எதிர்காலத்தில் ஏற்றுமதி சந்தைகளை இலக்காகக் கொண்டு செயல்பாடுகளை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். நன்மை கிட்டும்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அதிர்ஷ்டமான நாள்.

**துலாம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் தைரியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். புதிய வாய்ப்புகள் தேடிவரும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள்.

**மீனம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம்.

# மேகதாது அணையை கட்ட தமிழக அரசு அனுமதிக்காது

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

தஞ்சாவூர், ஜூன் 10
'காவிரியின் குறுக்கே மேகதாது அணையை கட்ட தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது' என கூறினார்.

நேற்று தஞ்சாவூர் சென்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், காவிரி பகுதியில் உள்ள கால்வாய்களை தூர் வார முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. டெல்டா பகுதியில் நடைபெறும் தூர்வாரும் பணிகள் விரைவில் நிறைவுபெறும். வரும் 12ஆம் திகதி மேட்டூர் அணையில் நீர் திறக்க உள்ளேன். விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, வேளாண் பணிகளை மேற்கொள்ள வேண்டும். எந்த காரணத்தை கொண்டும்.காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது. தி. மு. க. ஆட்சியில் வேளாண் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருகிறது - என்றார். (ஐ)

# 2,200 சிறுவர்கள் மாயம்; கண்டுபிடிக்க நடவடிக்கை

சென்னை, ஜூன் 10
தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் காணாமல்போன 2,200 சிறுவர்களை விரைவில் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என தமிழ்நாடு பொலிஸ் தலைமை பணிப்பாளர் சைலேந்திர பாபு தெரிவித்தார்.

மேலும், கடந்த ஆண்டு மட்டும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் 75 ஆயிரம் மனுக்கள் மகளிரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. அந்த மனுக்கள் மீது விசாரணை செய்து, சில மனுக்கள் மீது வழக்குபதிவு செய்யப்பட்டு, மகளிருக்கு நியாயம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் 18 வயதுக்கு உட்பட்ட 2,200 சிறுவர்கள் காணாமல் போய் உள்ளனர். இதுதொடர்பாக நீதிமன்றங்கள் சில கருத்துகளை தெரிவித்துள்ளன. அதன் அடிப்படையில் 1,624 பொலிஸ் அதிகாரிகள், 222 அனைத்து மகளிர் காவல் நிலைய அதிகாரிகள், உடனடியாக தனி கவனம்செலுத்தி, காணாமல் போன குழந்தைகளை 5 நாட்களுக்குள் கண்டுபிடிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# பிரமாணர்களுக்காக தமிழகத்தில் புதிய கட்சி

## நடிகர் எஸ். வி. சேகர்

சென்னை, ஜூன் 10
தமிழகத்தில் பிராமணர்களுக்காக விரைவில் புதிய கட்சி தொடங்கப்பட இருப்பதாக பாரதிய ஜனதா கட்சி பிரமுகரும் நடிகருமான எஸ்.வி.சேகர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில்,

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு சாதிக்கும் ஏதோ ஒரு பெயரில் கட்சி உள்ளது. அரசியல் அங்கீகாரத்தை பெறும்போதுதான் சமுதாயத்துக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும் என்பதை உணர்ந்து இந்த கட்சிகள் எல்லாம் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் பிராமணர்களுக்காக தமிழகத்தில் விரைவில் புதிய கட்சி தொடங்கப்படவுள்ளது. இது தொடர்பான அனைத்து வேலைகளும் முடிவடைந்து தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பெயர், கொடி எல்லாம் கிடைத்தவுடன் புதிய கட்சி தொடங்கப்படும்.

பிராமணர்களுக்கு அரசியல் அங்கீகாரம் கிடைப்பதற்காகவே இந்த புதிய கட்சி தொடங்கப்படுகிறது. சட்டசபையில் ஒரு பிராமணர்கூட சட்டமன்ற உறுப்பினராக இல்லை. பிராமணர்களின் புதிய கட்சி தொடங்கப்பட்ட பின்னர் அதில் பல்வேறு பிராமண சமுதாயத்தை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் இணைந்து செயல்படவுள்ளனர். அப்போது தான் கட்சிக்கு யார் தலைமை தாங்குவது என்பது தெரியவரும். அதே நேரத்தில் என்னை தலைமை தாங்குவதற்கு அழைத்தால் அதற்கு நான் தயாராகவே உள்ளேன்.

பாராளுமன்ற தேர்தலில் பிராமணர்களை வேட்பாளர்களாக நிறுத்தி பலத்தை காட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் 45 லட்சம் பிராமணர்கள் உள்ளனர். இவர்களில் அனைவருமே வசதியான வாழ்க்கையை வாழவில்லை. பிராமணர்களிலும் தினக்கூலிகள் இருக்கிறார்கள். இது போன்ற பிராமணர்களின் நலனுக்காகவே புதிய கட்சி தொடங்கப்படுகிறது -என்றார்.

# கோயில் அறங்காவலர் குழுவில் தாழ்த்தப்பட்டோருக்கு இடமளியுங்கள்

## திருமாவளவன் கோரிக்கை



சென்னை, ஜூன் 10
இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் அறங்காவலர் குழுவில் தாழ்த்தப்பட்ட ஒருவரையும், பெண் ஒருவரையும் உறுப்பினர்களாக அரசு நியமிக்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

ம. தி. மு. க. பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட வைகோவுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார்.

இதன்போது அங்கு பேசிய அவர், "ம. தி. மு. க. பொதுச்செயலாளராக வைகோ தெரிவாகியுள்ளார். பெரியார், அண்ணா ஆகியோரின் கொள்கைகளை பாதுகாக்கும் ஓர் அறமாக ம. தி. மு. க. உள்ளது.

மேலும், விழுப்புரம் மேல்பாதி ஊரில் கோயில் பூட்டி சீல் வைக்கப்பட்ட விவகாரம் குறித்த கேள்விக்கு பதில் அளித்த திருமாவளவன், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் அறங்காவலர் குழுவில் தாழ்த்தப்பட்ட ஒருவரையும், பெண் ஒருவரையும் உறுப்பினராக தமிழ்நாடு அரசு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# இலங்கை ஆயுதப் படையின் திறனை கட்டியெழுப்புவதில் இந்தியா உறுதி!

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 10**

**அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் ஒரு பகுதியாக, இலங்கையின் ஆயுதப்படைகளின் திறன் மற்றும் வசதிகளைக் கட்டியெழுப்புவதை உறுதி செய்வதில் இந்தியா உறுதியாக உள்ளது என்று அந்நாட்டு பாதுகாப்புச் செயலாளர் கிரிதர் அரமனே தெரிவித்தார்.**

கடந்த புதன்கிழமை இந்திய தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தியா-இலங்கை பாதுகாப்பு கருத்தரங்கு மற்றும் கண்காட்சியில் காணொளி மூலம் உரையிலிலே அவர் இவ்வாறு கூறினார்.

பயங்கரவாதம், கடற்கொள்ளை, போதைப்பொருள், ஆயுதக் கடத்தல் மற்றும் சட்டவிரோத இடம்பெயர்வு போன்ற இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் எதிர்கொள்ளும் பொதுவான பாதுகாப்புச் சவால்கள் பற்றி அவர் எடுத்துரைத்தார்.

மேலும் பாதுகாப்பான சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த சவால்களைச் சமாளிக்க மேம்படுத்தப்பட்ட மற்றும் செயலூக்கமான ஒத்துழைப்புக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

பிரதமர் நரேந்திர மோடியின் சாகர் (பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) என்பது இந்தியாவின் கடல்சார் கொள்கையின் அடிப்படைக் கருப்பொருள் என அரமனே குறிப்பிட்டார்.

இந்தியாவின் முன்னுரிமைப் பங்காளியாக இலங்கையை விவரித்த அவர், அண்டை நாட்டின் ஆயுதப் படைகளின் திறனைக் கட்டியெழுப்புவதில் இந்தியா உறுதி பூண்டுள்ளது எனக் கூறினார்.

இந்திய பாதுகாப்புத் துறை ஒரு பெரிய புரட்சியின் உச்சியில் நிற்கிறது என்றும், 'ஆத்மநிர்பர் பாரத்' திட்டத்தின் கீழ் புதுமை மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் அதே வேளையில், ஒரு வலுவான ஆராய்ச்சி மற்றும்



மேம்பாடு மற்றும் உள்நாட்டு உற்பத்தி சுற்றுச்சூழல் அமைப்பை நிறுவுவதில் கவனம் செலுத்துவதாகவும் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டார். (அ)



# யானையின் தாக்குதலில் இருந்து உயிர்தப்பிய சுற்றுலா பயணிகள்

*கொழும்பு, ஜூன் 10*

பொலனறுவை தேசிய பூங்காவுக்குச் சென்ற வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் காட்டு யானையின் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

ஓட்டோவில் பொலனறுவையில் உள்ள தேசிய பூங்காவுக்கு பயணித்தவேளையில் வீதி ஓரத்தில் அவர்கள் யானையை எதிர்கொண்டுள்ளனர்.

யானையால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணராமல் சுற்றுலாப் பயணிகள் அதற்கு அருகில் சென்று படம் பிடிக்க முயன்றுள்ளனர்.

தீடிரெனச் சீற்றமடைந்த யானை அவர்களை நோக்கி வேகமாக வந்து ஓட்டோக்களை தலைகீழாக புரட்டிபோட்டது.

சம்பவத்தின்போது ஓட்டோ ஒன்றில் இருந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இருவர் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இம்மாதம் 63 வைத்தியசாலைகளுக்கு புதிதாக 406 வைத்தியர்கள் நியமனம்

*கொழும்பு, ஜூன் 10*

நாடு முழுவதும் உள்ள 63 வைத்தியசாலைகளுக்கு புதிதாக 406 வைத்தியர்கள் இந்த மாதம் நியமிக்கப்படுவார்கள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், எதிர்வரும் ஜூன் 27 ஆம் திகதி 694 வைத்தியர்கள் தங்கள் பயிற்சியை நிறைவு செய்யவுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் பொருளாதாரச் சூழலுக்கு மத்தியிலும் சுகாதாரத்துறையில் பரந்த அளவிலான பதவிகளை நிரப்புவதற்கு தகுதியான நபர்களை உள்வாங்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, சுகாதார அமைச்சு அண்மையில் 222 குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்ததுடன், 2,000 தாதியர்கள் விரைவில் நியமனக் கடிதங்களைப் பெறுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கண்ணாடிப் போத்தலுடன் விளையாடி சிறுவன் பலி!

*கொழும்பு, ஜூன் 10*

மாலபே, தலஹேன, ஹல்பராவ பிரதேசத்தில் ஆறு வயதுச் சிறுவன் கண்ணாடிப் போத்தலுடன் விளையாடிக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

கண்ணாடிப் போத்தலுடன் குழந்தை கீழே விழுந்துள்ளதாகவும், போத்தல் உடைந்து சிறுவனின் உடலில் கண்ணாடி குத்தியதால் இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லேரியா பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனின் உடலின் அருகில் வளர்ப்பு நாய்க்குட்டி படுத்திருந்த உருக்கமான சம்பவமும் நிகழ்ந்தது. (அ)

# கைதிகளுக்கு போதைப்பொருள் விற்ற சிறைக்காவலருக்கு ஆயுள் தண்டனை!

*கொழும்பு, ஜூன் 10*

சிறைக்காவலர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதித்து கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ்.சபுவிட தீர்ப்பளித்தார்.

தண்டனை பெற்ற சிறைக்காவலர் எம்.ஜி. தெல்தெனிய பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட மாலக மிஹிர பண்டார (வயது 45).

சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் கடத்தல் மற்றும் சிறைக் கைதிகளுக்கு போதைப்பொருள் விற்பனை செய்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு, போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சிறைக்காவலர் மீது சட்டமா அதிபர் குற்றஞ்சாட்டினார்.

ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கின் தீர்ப்பை அறிவித்த மேல்நீதிமன்ற நீதிபதி, குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (அ)

# அதிகரித்து வருகிறது டெங்கு நோய் நிலை!

*கொழும்பு, ஜூன் 10*

நாட்டில் இது வரையான காலப்பகுதியில் 41,581 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, டெங்கு நோய் பரவல் காரணமாக இது வரையான காலப்பகுதியில் 25 மரணங்கள் பதிவாகியுள்ளன.

தற்போது நிலவி வரும் மழை காலநிலையுடன் குறித்த எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து தெரிவித்த தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் நிமல்கா பன்னிலஹெட்டி,

நாட்டின் 11 மாவட்டங்களிலுள்ள 67 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதியுயர் அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், குறித்த பகுதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வாராந்தம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து செல்கின்றது. இவர்களில் 49 வீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என அவர் கூறினார்.

கண்டி, நுவரெலியா, திருகோணமலை, மட்டக்களப்பு, குருணாகல், இரத்தினபுரி மற்றும் கேகாலை உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் மாத்திரமே கணிசமானளவு டெங்கு நோயாளர்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்த 22ஆவது வாரத்தில் கொழும்பில் மாத்திரம் 507 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், கழுத்துறையில் 193 மற்றும் கம்பஹாவில் 519 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2017ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 86,000 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் குறைவடைந்து வந்தாலும் இவ்வாண்டில் மீண்டும் அது சடுதியாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிக்குவின் வங்கிக்கணக்கில் வைப்பில் 60 மில்லியன் ரூபா!

*கொழும்பு, ஜூன் 10*

மத நல்லிணக்கம் மற்றும் தேசிய நல்லிணக்கத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சமூக ஊடகங்கள் ஊடாக கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ராஜாங்கனை சதாரத்ன தேரரின் மூன்று கணக்குகளில் ஒரு வருட குறுகிய காலத்துக்குள் 60 மில்லியன் ரூபா பணம் வரவு வைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மூன்று கணக்குகளுக்கு மேலதிகமாக அவருக்கு மேலும் பல வங்கிக் கணக்குகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அந்த வங்கிக் கணக்குகளில் உள்ள பணம் தொடர்பான அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அந்த வங்கிக் கணக்குகளிலும் அதிகளவு பணம் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வங்கிக் கணக்குகளில் அதிகளவு பணம் வெளிநாட்டில் இருந்து பெறப்பட்டுள்ளதாகவும், அவருக்கு பணம் கொடுத்தவர்கள் யார் என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

நாட்டில் மத மற்றும் தேசிய நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நோக்கில் இந்தப் பணம் அவருக்கு அனுப்பப்பட்டதா என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் இருந்தும் பிக்குவின் வங்கிக் கணக்குகளுக்கு பணம் கிடைத்துள்ளதாகவும், பாதாள உலகக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களும் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டவர்களும் இருக்கிறார்களா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# கஜேந்திரகுமாரின் கைது பெரும் தவறு

## நேற்றும் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டல்

கொழும்பு, ஜூன் 10

**பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொலிசாரால் முறையற்ற விதமாக கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் நேற்றும் பாராளுமன்றத்தில் சர்ச்சை ஏற்பட்டது.**

**நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த விவகாரத்தை பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.**

அவர் தெரிவிக்கையில்,

நேற்று (நேற்று முன்தினம்) நாடாளுமன்ற அலுவல்கள் குழு கூட்டத்தில் அனைவரும், கஜேந்திரகுமார் எம்.பி கைது செய்யப்பட்ட விதம் தவறானது என்பதைச் சபாநாயகரிடம் சுட்டிக்காட்டினோம். அவர் பாராளுமன்றம் வரும் வழியில் கைது செய்வது அவரது சிறப்புரிமையை மீறுவதாகும். அவர் என்ன கொலையா செய்தார். 8ஆம் திகதி வாக்குமூலம் வழங்க வருமாறு அழைத்துவிட்டு, அவர் பாராளுமன்றம் வருவதை தடுத்தது தவறானது.

பொதுப்பாதுகாப்பு அமைச்சர் இங்கு பொலிஸாரை பாதுகாக்கும் விதமாகப் பேசினார். அவர் அப்படித்தான் கதைக்கலாம். ஊடகங்களுக்கும் தவறான கருத்தை தெரிவித்துள்ளார். ஆனால் நடந்தது தவறான விடயம். இந்த தவறைச் சபாநாயகரிடம் சுட்டிக்காட்டினோம். எமது கண்டனத்தை தெரிவித்து கொள்கிறோம்-என்றார்.

இதையடுத்து பேசிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்- நான் தெளிவான கூற்றை நேற்று முன்வைத்தேன். நான் பாராளுமன்றத்தில்தான் பேசினேன். அதை ஊடகங்கள் வெளியிட்டிருக்கலாம்.

நடந்தது இதுதான். வாக்கு மூலம் வழங்க வருமாறு 5ஆம் திகதி அறிவிக்கப்பட்டது, 12 ஆம் திகதி வருவதாக அவர் கூறினார். 6ஆம் திகதி கொள்ளுப்பிட்டி பொலிஸார் ஒரு செய்தி அனுப்பினார்கள். 8ஆம் திகதி முன்னிலையாகி வாக்குமூலம் எிக்குமாறு. அவர் தமிழ்மொழியில் இல்லையெனக் குறிப்பிட்டு அதை ஏற்கவில்லை. பின்னர் பொலிஸ் அணியொன்று அவரது வீட்டுக்குச் சென்றபோது, வீட்டில் காவலாளி யாருமில்லையென்றார்.

ஆகவே நீங்கள் குறிப்பிட்டதைப்போல 8ஆம் திகதி வருமாறு அவருக்கு எந்தச் செய்தியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவர் அதை ஏற்கவில்லை. இதையடுத்தே ஒரு பொலிஸ் அணி அவரை கைது செய்தது. அவர் பாராளுமன்றம் வரும் வழியில் கைது செய்யப்படவில்லை-என்றார்.

இதன்போது கருத்த தெரிவித்த ரவூப் ஹக்கீம்- இது ஒரு ஊடகக் கண்காட்சியாகத்தான் நடத்தப்பட்டது. அங்கு ஊடகவியலாளர்கள் இருந்தார்கள். நாங்கள் அதை வீடியோவில் பார்த்தோம். கஜேந்திரகுமார் சபாநாயகருடன் பேசியதைக் கேட்டோம். அவர் பாராளுமன்றம் வரும் வழியில்தான் கைது செய்யப்பட்டார். அவர் பாராளுமன்றம் வரும் வழியிலுள்ளதாக சபாநாயகரிடம் கூறுவது கேட்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை பற்றி பொலிஸாரும், பொலிஸ்மா அதிபரும் அறிந்திருக்கவேண்டும். கஜேந்திரகுமார் சம்பவத்தைத் தெளிவுபடுத்த பாராளுமன்றம் வருவதை தடுக்கவும் கைது நடந்திருக்கலாம்-என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் எரான் விக்ரமரத்தின கருத்து தெரிவிக்கையில்-

நேற்று (நேற்று முன்தினம்) பாராளுமன்ற அலுவல்கள் குழு கூட்டத்தில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கடந்த காலத்தில் பல உறுப்பினர்கள் முறையற்ற விதமாக கைது செய்யப்பட்டிருந்ததாகக் கூறினார். இது கவலையளிக்கும் விடயம்.

பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை பாதுகாக்கப்படவேண்டும். அது பற்றி பொலிஸாருக்கு அறிவுறுத்த வேண்டும். சபாநாயகரின் அங்கீகாரம் பெற்றே கைது செய்யப்படவேண்டும்-என்றார்.

பொதுப்பாதுகாப்பு அமைச்சர்- சபாநாயகரிடம் அறிவித்தா, அங்கீகாரம் பெற்றா கைது செய்யவேண்டுமென நிலையியல் கட்டளை குறிப்பிடுகிறது?

எரான் விக்ரமரத்தின-சபாநாயகரிடம் அறிவிக்கவேண்டும், நிலையியல் கட்டளை உள்ளது. இதேபோல மரபும் உள்ளது. அதையே குறிப்பிடுகிறேன். அங்கீகாரம் பெற்றே கைது செய்யவேண்டும்-என்றார்.

(அ)

# மேலதிக வகுப்புகளாலேயே மாணவர்கள் உயர்தர பரீட்சையில் சித்தியடைகின்றனர்

## ஹரிணி அமரசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 10

இந்த நாட்டில் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவது இலவசக் கல்வியினால் அல்ல, தனியார் பணத்தினால் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

எமது பிள்ளைகள் இலவசக் கல்வியை முழுமையாக அனுபவிக்கின்றனர் என அரசாங்கம் கூறினாலும் அது பெரும் பொய் என அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலவசக் கல்வி எஞ்சியுள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும் மத்திய வங்கி ஆவணங்களின்படி சுகாதாரம் மற்றும் கல்விக்காக நாற்பது வீதம் குறைக்கப்பட்டுள்ளது.



இன்று பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் மாணவர்கள் இல்லை. மாணவர்கள் உயர்தரத்துக்கு மேலதிக வகுப்புகளுக்காக செல்கின்றனர்.

மேலும், பாடசாலைகளுக்கு தேவையான நிதி வசதிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிகள் வழங்கப்படாததால் ஒட்டுமொத்த பாடசாலை அமைப்பும் இன்று ஆபத்தான நிலையில் உள்ளது-என்றார்.

(அ)

# ரெலிக்கொம் தனியார் மயமாகாது!

கொழும்பு, ஜூன் 10

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை தனியார் மயமாக்க பரிந்துரைக்கவில்லை என தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையிலான தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரெலிக்கொம் தனியார்மயப் படுத்தப்படுவதன் ஊடாக தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் வெளிவரும் சாத்தியம் காணப்படுவதனால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# நாடு கடத்தப்பட்டார் சீனப் பிரஜை!

கொழும்பு, ஜூன் 10

போலி வெளிநாட்டு கடவுச் சீட்டுடன் நாட்டுக்குள் பிரவேசிக்க முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்ட சீனப் பிரஜை மீண்டும் சீனாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் நேற்று முன்தினம் நாடு கடத்தப்பட்டதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கினி இராச்சியத்தின் வெளிநாட்டு கடவுச்சீட்டுடன் அண்மையில் நாட்டுக்குள் பிரவேசிக்க முயற்சித்த குறித்த சீனப் பிரஜை கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டார்

இதனையடுத்து, அவர் சீன வெளிநாட்டு கடவுச்சீட்டை காண்பித்துள்ளார்.

இதன்பின்னர், அவருக்கு நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த விடயம் சர்ச்சைக்குரியதாக மாறியதை அடுத்து குறித்த சீனப் பிரஜை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டார்.

கைதான சீனப் பிரஜை, தம்மை சொந்த நாட்டுக்கு நாடு கடத்தாது, டுபாய்க்கு நாடு கடத்துமாறு கோரி நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அந்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது.

போதைப்பொருள் குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்வதற்காக சீன நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவர் என விசாரணைகளில் தெரியவந்தது.

இதனையடுத்து, குறித்த சீனப் பிரஜை மீண்டும் அந்த நாட்டுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

(அ)

# ஓ.எல். பரீட்சைக்கு தோற்றிய மாணவன் விபத்தில் மரணம்

கொழும்பு, ஜூன் 10

இபலோகம தம்பெலஸ்ஸாகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் க.பொ.த சாதாரணத் தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்த மாணவன் ஒருவன் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்த மாணவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றுமொரு பாடசாலை மாணவி ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் இரு மோட்டார் சைக்கிள்களிலும் பயணித்த இரு மாணவர்களும், மாணவியும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மரதன்கடவல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை பெற்று வந்த மாணவர் ஒருவர் நேற்று காலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

# குஞ்சு பொரிக்கும் முட்டைகளை இறக்குமதி செய்யத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 10

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கோழி இறைச்சி மற்றும் முட்டை தட்டுப்பாட்டைத் தீர்க்கும் வகையில் தாய்க் கோழிகளுக்குப் பதிலாக ஒரு இலட்சத்து 76 ஆயிரம் கோழிக்குஞ்சு பொரிக்கும் முட்டைகளை நெதர்லாந்தில் இருந்து இறக்குமதி செய்ய விவசாய அமைச்சு தயாராகவுள்ளதாக தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் தலைவர் பேராசிரியர் எச்.டபிள்யூ. சிறில் தெரிவித்துள்ளார்.

ஒரு வாரத்திற்கு 44 ஆயிரம் முட்டைகள் என்ற அடிப்படையில் ஒரு மாத காலத்திற்குள் நாட்டுக்கு ஒரு இலட்சத்து 76 ஆயிரம் முட்டைகள் கிடைக்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் கோழி இறைச்சி மற்றும் முட்டை தட்டுப்பாட்டை நீக்குவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

தாய் கோழிகளை இறக்குமதி செய்வதில் காலதாமதம் ஆவதால், முட்டை மற்றும் கோழிக்குஞ்சுகள் இறக்குமதி செய்யப்பட்டன.

ஒரு மாத குறுகிய காலத்தில் முட்டை மற்றும் இறைச்சி கிடைப்பது கடினம் என்பதால், கோழிக்குஞ்சு பொரிக்கும் முட்டைகளை இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

எனவே, கோவிட்-19 பரவலின் போது மூடப்பட்ட தனியார் துறை கோழிப்பண்ணைகளுக்கு நெதர்லாந்தில் இருந்து பெறப்படும் கோழிக்குஞ்சு பொரிக்கும் முட்டைகளை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் மகிந்த அமரவீர அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

(அ)

# விவசாயிகளின் போராட்டத்தால்தான் கோட்டாபய பதவி இழக்க நேரிட்டது!

### சபையில் சுட்டிக்காட்டினார் சாள்ஸ் எம்.பி.

**கொழும்பு, ஜூன் 10**

**நாட்டின் முதுகெலும்பாக விவசாயிகள் இருக்கின்றார்கள் என்பதற்கு சிறந்த உதாரணமாக கோட்டாபய நாட்டை விட்டு ஓடியதை குறிப்பிடமுடியும் என்றும் விவசாயிகள் முன்னெடுத்த போராட்டம் காரணமாகவே கோட்டாபய பதவியை இழக்க நேரிட்டிருந்தது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய பிரச்னையான மந்திகளின் செயற்பாடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு கொண்டு இருக்கும் நிலையில் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டியது கட்டாயமானது.

விவசாயிகள் முன்னெடுத்த போராட்டமானது, நாட்டின் ஜனாதிபதியை மாற்றும் அளவுக்கு இருந்தது. ஆகவே பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடகே முன்வைத்த தனிநபர் பிரேரணையை ஆதரிப்பதோடு இது தொடர்பாக அரசாங்கம் எந்தவிதமான முயற்சிகள் எடுத்தாலும் அதற்கு முழுமையான ஆதரவை வழங்குவேன்.

அவசரமாக மந்திகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயிகள் சொட்கண் துப்பாக்கியை கோருகின்றனர். அமைச்சர் விரைவில் இதற்கு தீர்வை தரவேண்டும்-என்றார். (அ)

# யாழில் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்ட குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

வீதியைக் குறுக்கே கடக்கும் போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டவர் உயிரிழந்தார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் மனோகரன் (வயது - 45) என்பவரே மரணமடைந்தார்.

வரணி, சிட்டிவேரம் அம்பாள் கோயிலுக்குக் கடந்த 6ஆம் திகதி சென்ற பறவைக்காவடி உழவு இயந்திரத்துடன் இவர் நடந்து சென்றுள்ளார். திடீரென வீதியின் மறுபக்கத்தில் உள்ள கடைக்குச் சோடா வாங்குவதற்காக வீதியைக் குறுக்காகக் கடந்துள்ளார். அப்போது எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணும் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்திருந்தார்.

காயமடைந்த மனோகரன் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

# அரசாங்க நிறுவனங்கள் அனைத்தும் அரச கட்டடங்களில் இயங்கவேண்டும்

### தனிநபர் பிரேரணை நேற்று முன்வைப்பு

கொழும்பு, ஜூன் 10

அனைத்து அரச நிறுவனங்களும் அரச கட்டடங்களில் மாத்திரம் நிறுவப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி நேற்று பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையை சமர்ப்பித்தார்.

அனைத்து அரச நிறுவனங்களும் வரி செலுத்துவோரின் பணத்தினாலேயே பராமரிக்கப்படுவதாகத் தெரிவித்த விஜேசிறி, ஆடம்பரமான கட்டடங்களில் அதிக வாடகை கொடுத்து சில அமைச்சுக்கள் அடிக்கடி அலுவலகங்களை நடத்துவதாகத் தெரிவித்தார்.

அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்துக்குச் சொந்தமான கட்டடத்துக்கு மாதாந்தம் 13 இலட்சம் ரூபா, தேசிய லொத்தர் சபைக்கு மாதம் 65 இலட்சம் ரூபா, கொள்ளுப்பிட்டியில் உள்ள மின்சார அமைச்சுக்கு மாதம் 20 இலட்சம் ரூபா, மின்சார சபை நகர அலுவலகத்திற்கு மாதம் 20 இலட்சம் ரூபா, மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கட்டடத்திற்கு மாதாந்தம் 20 இலட்சம் ரூபா செலவிடப்படுவதாக சமிந்த விஜேசிறி தெரிவித்தார். (அ)

# சர்வதேசத்துக்கு முட்டாள்தனமான கதைகளை கூறி வருகிறார் ரணில்!

### ரில்வின் சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 10

இந்த நாட்டின் 90 வீதமான மக்கள் ரணில் விக்கிரமசிங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே உண்மையான கதை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டார்.

ரணில், உலகம் முழுவதும் பல்வேறு முட்டாள்தனமான கதைகளை கூறி வருகிறார் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு மூன்று மாதங்களாகின்றன. மக்களின் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் வரையில் போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. இந்த உள்ளூராட்சி தேர்தலை உடனடியாக நடத்துங்கள்.

தேர்தல் வந்தால் தோற்றுவிடுவோம் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். ஜனாதிபதித் தேர்தலை தவிர அனைத்து தேர்தலுக்கும் தேசிய மக்கள் சக்தி தயாராக உள்ளது. ஆனால் மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாத்து அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலை உடனடியாக நடத்துங்கள். அதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உள்ளது.

இந்த வாக்கெடுப்பை நடத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளர்களுடன் இன்று இங்கு வந்தோம்.

ரணில், உலகம் முழுவதும் பல்வேறு முட்டாள்தனமான கதைகளை கூறி வருகிறார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு தேர்தல் ஆணையம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் ஜனநாயகத்திற்கு மிக மோசமான காலம் வந்துள்ளது. அதனால்தான் தேசிய மக்கள் படை இன்று தேர்தல் ஆணைக்குழுவிற்கு முன்னால் வந்துள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்தவர்கள் சம்பளம் இல்லாமல் பாதி சம்பளம் பெற வேண்டும். தற்போது அவர்கள் வேறு மாகாணங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்கின்றார். அரசாங்கத்திடம் பணம் இல்லை என்றால் எவ்வாறு வெளிநாடு செல்கின்றார்.அமைச்சர்கள், திருமணங்கள் மற்றும் மரண வீடுகளுக்குச் செல்கின்றனர்.

நாட்டின் 90 வீதமான மக்கள் ரணிலை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மையான கதை. அது உண்மை. வாக்குகளைப் பெறுவதே ஜனநாயகம்-என்றார். (அ)

# கடல்சார் பயிற்சிக் கல்லூரி அமைப்பது குறித்து ஆராய்வு



கொழும்பு, ஜூன் 10

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன்-பிரான்கோயிஸ் பேக்டெட், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு வருகை தந்த பிரான்ஸ் தூதுவரை, இராஜாங்க அமைச்சர் வரவேற்றார். அதன் பின்னர் இரு தரப்பு பேச்சு இடம்பெற்றது

1948ஆம் ஆண்டு முதல் பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்ட கால இராஜதந்திர உறவுகளை நினைவு கூர்ந்த இராஜாங்க அமைச்சர், சிறந்த இருதரப்பு உறவுகள் சுமார் 75 வருடங்களாக இருந்து வருவதாகவும், இது மேலும் பல வருடங்கள் தொடர வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையானது உலகில் எழுத்தறிவு வீதம் அதிகம் உள்ள நாடாக இருப்பதால், இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் கடல்சார் பயிற்சிக் கல்லூரி ஒன்றினை இலங்கையில் நிறுவுவது குறித்து ஆய்வு செய்வது குறித்தும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பின் போது பிரான்ஸ் தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஆரேலியன் மெயில்லெட் மற்றும் கடல்சார் பாதுகாப்புக்கு பொறுப்பான இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு அதிகாரி கொமாண்டர் ஜீன்-பாப்டிஸ்ட் ட்ரூச் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் தம்மிக்க வெலகெதரவும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார். (அ)

# டயானாவை கைது செய்ய ஏன் அவசரப்படவில்லை?

### நளின் பண்டார கேள்வி



கொழும்பு, ஜூன் 10

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.யைக் கைது செய்ய அரசாங்கமும் பொலிஸாரும் காட்டிய அவசரத்தை டயனா கமகே எம்.பி. விடயத்தில் ஏன் காண்பிக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவாக செயற்படுத்தப்படுகிறதா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. டயனா கமகே எம்.பியின் இரட்டைக் குடியுரிமை விவகார வழக்கின் தீர்ப்பு தொடர்ந்து பிற்போடப்படுகிறது. முறைகேடான முறையில் கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டுள்ள விவகாரத்தில் டயனா கமகேயை கைது செய்ய முடியும் என கோட்டை நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில் அவரை இதுவரை கைது செய்யாததற்கான காரணம் என்ன?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியைக் கைது செய்வதற்கு அரசும் பொலிஸும் காட்டிய அக்கறை மற்றும் அவசரம் டயனா கமகே எம்.பி விவகாரத்தில் ஏன் காண்பிக்கப்படவில்லை?-என்றார். (அ)

# சீனா கூறுவதுபோல் இந்திய இராணுவம் பலவீனமானதா?

- தீபக் மண்டல்

ஆசிய நாடுகளின் முக்கியமான பாதுகாப்பு மன்றமான ஷாங்கிரி-லா (Shangri-La) பேச்சுவார்த்தையில் பங்கேற்ற சீனக் குழு ஒன்று, இந்தியாவின் ராணுவத் திறனைக் கேள்விக்குள்ளாக்கி புதிய விவாதத்தை உருவாக்கியுள்ளது.

சிங்கப்பூரில் நடைபெற்ற ஷாங்கிரி- லா பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய சீனா ராணுவத்தின் பிரதிநிதி, “இந்திய ராணுவம் சீன ராணுவத்துக்கு சவால் அளிக்கக்கூடியது அல்ல” என்று குறிப்பிட்டார்.

ராணுவத்தின் நவீனமயமாக்கல் மற்றும் பாதுகாப்பு தயாரிப்புத் திறனில் சீனாவுக்கு சவால் விடும் நிலையில் இந்தியா இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சௌத் சீனா மார்னிங் போஸ்ட் ஊடகத்தில் அகாடமி ஆஃப் மிலிட்டரி சயின்ஸின் மூத்த கர்னல் ஜாவோ ஜியாஜோ, “வரவிருக்கும் சில பத்து ஆண்டுகளில், அதன் பலவீனமான தொழில்துறை உள்கட்டமைப்பு காரணமாக, ராணுவ பலத்தில் சீனாவுடன் போட்டியிடும் நிலையில் இந்தியா இருக்காது. ராணுவத்திற்காக சீனா பெரிய மற்றும் நவீன உற்பத்தி தளங்களை உருவாக்கியுள்ளது” என்றார்.

சீன ராணுவத்தின் உயரதிகாரியின் இந்த கருத்தைத் தொடர்ந்து, இந்திய ராணுவம் மற்றும் சீன ராணுவத்தின் தற்போதைய பலத்தை ஒப்பிடும்போக்கு தொடங்கியிருக்கிறது.

சீன ராணுவம் மிகவும் வலிமையானது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று பல ஆய்வாளர்களும் கூறுகிறார்கள். ஆனால் சமீபத்திய ஆண்டுகளில், இந்தியா தனது ராணுவத்தை நவீனமயமாக்குவதில் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பதும் உண்மை என்பது அவர்களின் கருத்து.

ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவன தரவுகளின்படி, 2018 முதல் 2022 வரை, உலகிலேயே அதிக ஆயுதங்களை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இதில், 31 சதவீத ஆயுதங்கள் ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

**சீனாவின் லட்சியமும் இந்தியாவின் முன்னெடுப்பும்**

ஷாங்கிரி-லா பேச்சுவார்த்தையில் பங்கேற்க வந்த சீன ராணுவ தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியரும் மூத்த கர்னலுமான ஹாங் லீ இது தொடர்பாக சௌத் சீனா மார்னிங் போஸ்ட் ஊடகத்திடம் பேசும்போது, இந்தியா தன்னை வல்லரசாக மாற்ற ராணுவத்தை பலப்படுத்த எந்த கல்லையும் விட்டு வைக்கவில்லை என்றும் மறுபுறம், சீனாவின் மூலோபாய லட்சியங்களும் தொடர்ந்து பொருளாதார ரீதியாக வளர்ந்து வருகின்றன என்றும் குறிப்பிட்டார்.

தற்போது, அமெரிக்காவின் போட்டியாளராக தன்னை சீனா பார்க்கிறது. ஆசிய அளவில் பார்க்கும்போது ஜப்பான், இந்தியா என வல்லரசுகளும் சீனாவுக்கு போட்டியாக பார்க்கப்படுகின்றன.

இந்தோ- பசிபிக் முதல் தெற்கு சீன கடல் வரை, சீனாவிற்கும் அதன் போட்டியாளர்களுக்கும் இடையில் சச்சரவுகள் உள்ளன. அதனால்தான் சீனா தனது ராணுவத் திறனை பலப்படுத்துவதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இந்த ஆண்டின் மார்ச் மாதத்தில், சீன நாடாளுமன்றத்தின் வருடாந்திர கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக சீன பிரதமர் லி கியாங், 2023ஆம் ஆண்டில் தனது ராணுவத்திற்காக சீனா 225 பில்லியன் அமெரிக்க டாலரை செலவு செய்யும் என்று அறிவித்தார். இது முந்தைய ஆண்டை விட 7.2 சதவிகிதம் அதிகம் ஆகும்.

பாதுகாப்புக்கான சீனாவின் பட்ஜெட் 2020ல் 6.6 சதவிகிதமும் , 2021ஆம் ஆண்டில் 6.8 சதவிகிதமும் 2022ல் 7.1 சதவிகிதமும் அதிகரித்து வந்துள்ளது. இங்குதான் சீனாவின் பொருளாதாரம் முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது குறையத் தொடங்கியது.



அமெரிக்கா தனது பட்ஜெட்டில் பாதுகாப்பிற்கு ஒதுக்கும் நிதியுடன் ஒப்பிடும்போது சீனா பட்ஜெட்டில் தனது பாதுகாப்புக்கு ஒதுக்கிய 225 பில்லியன் டாலர் என்பது மூன்றில் ஒரு பங்குதான். ஆனால், அதுவே இந்தியா தனது பாதுகாப்புக்கு ஒதுக்கும் நிதியுடன் ஒப்பிட்டால், இது மூன்று மடங்கு அதிகமாகும். இந்தியாவின் பாதுகாப்பு பட்ஜெட் 2023-24ல் 54.2 பில்லியன் டாலராக இருக்கும்.

சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கான இலக்கு என்பது 5 சதவீதமாக உள்ளது. தனது ராணுவத்திற்காக 7 சதவீதம் நிதியை சீனா செலவிடுகிறது. அதே நேரத்தில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அடுத்த நிதியாண்டில் 7 சதவீதத்திற்கும் குறைவாகவே இருக்கலாம். ஆனால், பட்ஜெட்டில் பாதுகாப்புக்கு இந்தியா ஒதுக்கும் நிதி 13 சதவீதமாக உயர்ந்துள்ளது.

**கல்வான் தாக்குதலுக்கு பிறகு இந்தியா எப்படி தயாராகி வருகிறது?**

கடந்த 2020 ஜூன் 15-ல் கிழக்கு லடாக்கில் இருக்கும் கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில், இந்தியா மற்றும் சீன துருப்புகளுக்கு இடையில் ஒரு பெரிய கைகலப்பு நடந்தது. இந்த தாக்குதலில் இந்தியா தரப்பில் 20 ராணுவ வீரர்கள் உயிர் இழந்தனர். இதற்கு பின்னர், இந்தியா தனது பாதுகாப்புத் தயாரிப்புகளை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளத் தொடங்கியது.




இந்த மோதலுக்குப் பிறகு, சீனாவுடனான தனது எல்லையில் ராணுவத் தயாரிப்புகளில் இந்தியா துரிதமாக செயல்படுவதாக அமெரிக்க மதியுரையகமான யுனைடெட் ஸ்டேட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் பீஸ் கூறுகிறது.

எல்ஏசி பகுதிகளில் கூடுதலாக 50 ஆயிரம் ராணுவ வீரர்களை இந்தியா நிறுத்தியது. எல்லையோர பகுதிகளில் இந்திய விமானப் படை நிறுத்தப்பட்டது. எல்லையை ஒட்டிய பகுதிகளில் உட்கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது.

எல்ஏசியை ஒட்டியுள்ள 73 மூலோபாய சாலைகள் தயாராகி வருகின்றன. அருணாச்சல பிரதேசத்திலேயே 1430 மைல் நீள சாலை தயாராகி வருகிறது.

இந்தியா பாதுகாப்புக்கு ஒதுக்கிய ரூ.5.94 லட்சம் கோடியில் புதிய ஆயுதங்கள் மற்றும் ராணுவ தளவாடங்களுக்காக ரூ.1.62 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சீனாவின் ராணுவ வலிமையைப் பற்றி இந்தியா எவ்வளவு கவலைப்பட வேண்டும்?**

இந்தியாவைவிட அதிகமாக சீனா தனது ராணுவத்திற்காக செலவிடுகிறது. தாங்கள் ராணுவத்துக்கு செலவிடும் தொகையைவிட சீனா அதிக தொகையை செலவிடுவது குறித்து இந்தியா கவலைப்பட வேண்டுமா?

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சீன படிப்புகள் துறையின் இணை பேராசியராக உள்ள அர்விந்த் யெல்லேரி இது தொடர்பாக கூறுகையில், “ஜிடிபியுடன் ஒப்பிடும்போது பாதுகாப்பு பட்ஜெட்டை ஜிடிபி அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மையான சித்தரம் நமக்கு தெரியாது. பாதுகாப்புத் தேவைகள் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடும்.” என்றார்.

“அமெரிக்காவும் சீனாவும் தங்களை பெரியவர்களாக காட்டிக்கொள்ள விரும்புவதால் அவர்கள் அதிகமாக செலவிட வேண்டியுள்ளது. இந்தியா அவர்களுடன் போட்டிப்போட்டு அதிகமாக செலவிடத் தேவையில்லை” என்றும் அவர் குறிப்பிட்டார்.

“பாதுகாப்பு தயாரிப்பை இந்தியா தற்போது பல்வகைப்படுத்தி வருகிறது. ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளிடம் இருந்து இந்தியா ஆயுதங்களை வாங்கி வருகிறது. ஆனால் தற்போது ஆயுதங்கள் மற்றும் ராணுவ உபகரணங்கள் தயாரிப்பில் தன்னிறைவை நோக்கி முன்னேறி வருகிறது. பாதுகாப்புத் துறையில் தனியார் நிறுவனங்கள் வரவுள்ளன. இந்த செலவுகள் பாதுகாப்பு பட்ஜெட்டில் தெரியாவிட்டாலும், ஆயுதங்கள் மற்றும் ராணுவ உபகரணங்களுக்கான செலவு அதிகரித்து வருகிறது” என்றும் யெல்லேரி குறிப்பிடுகிறார்.



**இந்தியாவின் பாதுகாப்பு முன்னெடுப்புகள் பலவீனமாக இல்லை**

சீனா தனது ராணுவ முன்னெடுப்புகளில் மிகவும் ஆக்ரோஷமாக உள்ளது. இதைப் பற்றி இந்தியா கவலைப்பட வேண்டுமா?

“இந்தியாவுக்கென தனிப்பட்ட பாதுகாப்புத் தேவைகள் உள்ளன, இந்த தேவைகளுக்கு ஏற்ப தனது வேலையை அது செய்கிறது. அதேசமயம் சீனாவின் லட்சியம் மிகப் பெரியது. இந்தியப் பெருங்கடல், இந்தோ-பசிபிக் முதல் தென் சீனக் கடல் வரை -துறைமுகம் கட்டுவதில் இருந்து தனித்தனியாகச் சென்று பல்வேறு வகையான உள்கட்டமைப்புகளை அமைப்பது வரை- அதன் பாதுகாப்புச் செலவு அதிகரித்து வருகிறது.” என்று யெல்லேரி கூறுகிறார்,

ராணுவ விவகாரங்களில் சீனாவை விட இந்தியா அதிக பொறுப்பான மற்றும் நம்பகமான நாடாக இருந்து வருகிறது என்று யெல்லேரி கூறுகிறார். எனவே, இந்தியாவின் பாதுகாப்பு பட்ஜெட் குறைவாக இருந்தாலும், அது பாதுகாப்பு முன்னெடுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று அர்த்தமல்ல.

“டந்த சில ஆண்டுகளில், இந்தியா ராணுவத் தயார் நிலையில் நிறைய வேலைகளைச் செய்துள்ளது. பாதுகாப்பு ஆராய்ச்சியில் இந்தியா பணியாற்றியதையும், அதன் தாக்கம் உற்பத்தியில் இருக்கப் போவதையும் நீங்கள் காண்பீர்கள்.”

ஒரு நாட்டின் பாதுகாப்புச் செலவினம் அதிகமாக இருந்தாலும், அது வாங்குவதற்காக மட்டுமே இருந்தால், அது நாட்டின் தன்னம்பிக்கையை குறைக்கிறது.

இந்த நிலையை இந்தியா புரிந்து கொண்டுள்ளது. எனவே, போரின் தன்மை மாறி வருவதால், அதற்கான முன்னேற்பாடுகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவின் பாதுகாப்பு தயாரிப்புகள் குறித்து சீனா கேள்வி எழுப்பியுள்ளது. ஆனால் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுடன் ஒப்பிடுகையில் சீனாவின் பாதுகாப்பு தயாரிப்புகளின் தரம் எந்த இடத்தில் உள்ளது என்பதும் பார்க்க வேண்டிய விஷயம் என்று யெல்லேரி குறிப்பிடுகிறார்.

சீனாவில் பாதுகாப்பு தயாரிப்புகள் இருக்கலாம். ஆனால் அதன் தரம் என்ன? என்பதுதான் கேள்வி. இவை இன்னும் சோதனை செய்யப்படவில்லை. சீனா ஒவ்வொரு ஆண்டும் ஒரு போர்க் கடற்படையை உருவாக்குகிறது அல்லது போர்க்கப்பல்களை தயார் செய்து வருகிறது. ஆனால் தரத்தில் அது எங்கே நிற்கிறது என்பது ஒரு பெரிய கேள்வி.

பல நூற்றாண்டுகளாக கடற்படையில் இந்தியா பெரும் சக்தியாக இருந்து வருகிறது. சோழர் மற்றும் மராட்டிய ஆட்சியாளர்கள் வலுவான கடற்படையைக் கொண்டிருந்தனர் என்றும் யெல்லேரி சுட்டிக்காட்டுகிறார்.

அதேசமயம் சீனா இந்த விஷயத்தில் பலவீனமாக உள்ளது. சீனா கடலில் எந்தப் போரையும் நடத்தவில்லை. எனவே இந்த விஷயத்தில் அவர்களது திறமை கேள்விக் குறியாக உள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பு தயாரிப்புகள் பலவீனமாக இருப்பதால், அதன் ராணுவத் திறன் பலவீனமாக இருக்கலாம் என்று கூறுவது தவறு என்றும் அரவிந்த் யெல்லேரி கூறுகிறார்.



# சாப்பிட்ட பிறகு நஞ்சாக மாறும் 7 உணவுகள் - தவிர்ப்பது எப்படி?

**பெடகாடி ராஜேஸ்**

உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் சராசரியாக 16 லட்சம் பேர், “உண்ட பின் நஞ்சாக மாறும்” உணவினால் பாதிக்கப்படுவதாகவும், ஐந்து வயதுக்குட்பட்ட 340 குழந்தைகள் உணவினால் ஏற்படும் நோய்த்தொற்றுகளால் தினமும் உயிரிழக்கிறார்கள் என்றும் உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

அடிக்கடி ‘உண்ட பின் நஞ்சாகும்” உணவுப் பொருட்கள் எவை என்பது பற்றியும் உணவில் தொற்று ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் பார்ப்போம்.

அமெரிக்காவில் செயல்படும் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் (சிடிசிபி)தகவல் படி, வேகவைக்கப்படாத அல்லது பச்சையான இறைச்சி, சரியாகக் கழுவப்படாத காய்கறிகள், பச்சை பால், பிற பால் பொருட்கள், அதிக நேரம் சேமித்து வைக்கப்பட்ட முட்டைகள், மீன் போன்றவற்றை உண்ணும் போது அவை நச்சுத்தன்மைக்கு மாறுகின்றன எனத் தெரியவருகிறது. சரியாக சுத்தம் செய்யப்படாத உணவு. அசுத்தமான முளைகட்டிய பயறுகள், மற்றும் அதிக காலம் பயன்படுத்தப்படாத மாவு என இவை ஒவ்வொன்றையும் விரிவாக அறிந்து கொள்வோம்.



**1. பச்சை இறைச்சி ஏற்படுத்தும் ஆபத்து**

பச்சையான அல்லது வேகவைக்கப்படாத இறைச்சியை உண்பதால் ‘உணவு நஞ்சாக” மாறும் ஆபத்துக்கள் அதிகம். இவற்றில் உள்ள நுண்ணுயிரிகளில் கேம்பிலோபாக்டர் என்ற பாக்டீரியா உள்ளது. சால்மோனெல்லா, க்ளோஸ்ட்ரிடியம் பெர்ஃபிரிங்கன்ஸ், மற்றும் ஈ.கோலி போன்ற நுண்ணுயிரிகளும் சில நேரங்களில் இருக்கலாம்.


அதனால்தான் பச்சை இறைச்சியை எப்போதும் அப்படியே கழுவ வேண்டாம் என்று சி.டி.சி.பி. கூறுகிறது. ‘நீங்கள் அவற்றைக் கழுவினால், அவற்றில் உள்ள பாக்டீரியாக்கள் தட்டுகள், கிண்ணங்கள் மற்றும் சுற்றியுள்ள சூழலுக்கும் பரவும். இது அப்பகுதியை முழுமையாக மாசுபடுத்தும்,” என்று சி.டி.சி.பி. விளக்குகிறது. இறைச்சியை சரியாகவும், முழுமையாகவும் சமைத்தால், இந்த பாக்டீரியாக்களும் பிற நுண்ணுயிரிகளும் இறந்துவிடும் என்று விளக்குகிறது.

“சாப்பாட்டுக்குப் பின் மீதமுள்ள இறைச்சியை, சமைத்த இரண்டு மணி நேரத்திற்குள் குளிர்சாதன பெட்டியில் வைக்க” சி.டி.சி.பி. பரிந்துரைக்கிறது.

இதே போல் பச்சை இறைச்சியை குளிர் சாதனப் பெட்டியில் வைக்க நீங்கள் விரும்பினால் இறைச்சித் துண்டுகளை பல சிறிய துண்டுகளாக வெட்டி வைக்க வேண்டும் என்றும், அப்போது தான் வேகமாக உறைந்து, பாக்டீரியா வளர்ச்சியின் வாய்ப்பைக் குறைக்கும் என்று சி.டி.சி.பி. விளக்குகிறது.

அதே நேரம் பச்சை இறைச்சியால் சிஸ்டிசிரோசிஸ் போன்ற நோய்த்தொற்றுகள் ஏற்படுவதற்கான ஆபத்து மிக அதிகம் என டாக்டர் பிரதிபா லட்சுமி எச்சரிக்கிறார். “இறைச்சியை சரியாக சமைக்கவில்லை என்றால், பல வகையான தொற்றுகள் ஏற்படும். அதனால், இறைச்சியை முழுவதுமாக சமைத்த பின்னரே உண்ண வேண்டும்” என்கிறார் அவர்.

இதே போல், துரித உணவு கடைகளில் கிடைக்கும் அசைவ உணவுகள் சரியான முறையில் சமைக்கப்படாமல் இருந்தால் அவையும் அடிக்கடி நஞ்சாக மாறும் ஆபத்து இருக்கிறது என்கிறார் டாக்டர் ஆர்.எஸ்.பி நாயுடு. ‘உணவகங்களில் உள்ள இறைச்சி, தெரு முனை உணவு கவுன்டர்களில் விற்கப்படும் கபாப்கள் மற்றும் டிக்காக்கள் ஆகியவை நுண்ணுயிரிகளை அழிக்கும் வரை சமைக்கப்படுவதில்லை. அதனால் அடிக்கடி அவற்றை உண்டபின் நஞ்சாக மாறுகின்றன,” என்கிறார் அவர்.



**2. நன்றாக கழுவப்படாத காய்கறிகள்**

புதிய பச்சை காய்கறிகள் மற்றும் கீரைகள் உடலுக்கு பல நன்மைகளைக் கொண்டுள்ளன. ஆனால், சில சமயங்களில் இவற்றை உண்டபின் நஞ்சாக மாறுகின்றன. அது மட்டுமின்றி தொற்று நோய்களையும் உண்டாக்கும் என்கின்றனர் நிபுணர்கள்.

பச்சை காய்கறிகள் சில நேரங்களில் சால்மோனெல்லா, ஈ.கோலி மற்றும் லிஸ்டீரியா போன்ற நுண்ணுயிரிகளைக் கொண்டிருக்கலாம். விளைவிக்கும் இடத்திலிருந்து நம் வீடு வரை அவை பயணிக்கும் எந்த இடத்திலும் மாசுபடலாம்.

சில நேரங்களில் அவை நம் சமையலறையில் உள்ள மற்ற பொருட்களில் படிந்துள்ள நுண்ணுயிரிகளால் மாசுபடலாம். அதனால் அவற்றை கவனமாக சுத்தம் செய்த பின்னரே உணவாக உட்கொள்ள வேண்டும்.

பொதுவாக காய்கறிகள் எங்கு விளைவிக்கப்படுகின்றன என்பது மிக முக்கியமானது என்கிறார் டாக்டர் பிரதிபா லட்சுமி. “சில நேரங்களில் காய்கறிகள் ஆரோக்கியமற்ற சூழலில் வளர்க்கப்படுகின்றன. பல வகையான பூச்சிக்கொல்லிகளும் அவற்றின் மீது தெளிக்கப்படுகின்றன. எனவே காய்கறிகள் அல்லது பழங்களை உப்பு கலந்த நீரில் நன்றாக கழுவிய பின்னரே நாம் சாப்பிட வேண்டும். இல்லையெனில், ஒவ்வாமை மற்றும் தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளது” என்றார்.

டாக்டர் பிரதிபா லட்சுமி கூறியதை டாக்டர் ஆர்எஸ்பி நாயுடுயும் ஏற்றுக்கொண்டார். ‘நாம் இங்கு முக்கியமாக தூய்மை பற்றி பேச வேண்டும். சில நேரங்களில் பானி பூரி கூட சாப்பிட்ட பின் நஞ்சாக மாறுகிறது. இதற்கு முக்கிய காரணம் தூய்மையின்மை தான். பானி பூரி தயாரிக்கப் பயன்படும் காய்கறிகள் சரியாக கழுவப்படுவதில்லை, அல்லது அசுத்தமான சூழலில் அவை சமைக்கப்படுகின்றன. காய்கறிகளை விநியோகம் செய்பவர் அவற்றின் சுகாதாரத்தை பராமரிக்காவிட்டால் கூட இது போன்ற ஆபத்துக்கள் ஏற்படும்,” என்று அவர் கூறினார்.



**3. பச்சை பாலும், மற்ற பால் பொருட்களும்**

பதப்படுத்தப்படாத பால் மற்றும் பாலைக் கொண்டு தயாரிக்கப்படும் உபப்பொருட்களும் சாப்பிட்ட பின் நஞ்சாக மாறும் ஆபத்துக்கள் அதிகம்.

ஏனெனில் பச்சை பாலில் கேம்பிலோபாக்டர், கிரிப்டோஸ்போரிடியம், ஈ.கோலி, லிஸ்டீரியா, சால்மோனெல்லா போன்ற நுண்ணுயிரிகள் இருக்கலாம். இவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் ஐஸ்கிரீம், தயிர் போன்றவையும் தீங்கு விளைவிக்கும்.

பாலில் உள்ள சத்துக்கள் அதை சூடாக்கும் போது பெரிய அளவில் அழிந்து போவதில்லை என்பதால் அதைச் சூடாக்கிச் சாப்பிடுவதே நலம்.

பச்சை பாலில் உள்ள லிஸ்டீரியா என்ற நுண்கிருமி மிகவும் ஆபத்தானது. அது கருச்சிதைவுகள் மற்றும் முன்கூட்டியே குழந்தை பிறத்தல் போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்தும் என்று சி.டி.சி.பி. கூறுகிறது.


இது மட்டுமின்றி பச்சைப் பாலில், அடிவயிற்றில் காசநோய் ஏற்படுத்தும் அபாயமும் அதிகம் என்று டாக்டர் பிரதிபா லட்சுமி கூறுகிறார். “தாய் பால் குடிக்கும் குழந்தை கூட பச்சை பாலைத் தான் குடிக்கிறது என நிறைய பேர் சொல்கின்றனர். ஆனால், தாய் பாலுக்கும், கால்நடைகளிலிருந்து பெறப்படும் பாலுக்கும் இடையே வேறுபாடு உள்ளது -பசு அல்லது எருமையிலிருந்து பால் கறப்பவர் தனது கைகளை எவ்வளவு சுத்தமாக வைத்திருப்பார்? பால் கறப்பதற்காக என்ன வகையான கிண்ணங்கள் பயன்படுத்தப்படும்? எந்த மாதிரியான பாத்திரங்களில் அந்த பால் சேமிக்கப்படும்? - இது போல் பல காரணிகள் இங்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால் பாலை சிறிது நேரம் சூடுபடுத்துவது நல்லது” என்றார்.

**4. பச்சை முட்டைகள்**

பச்சை முட்டைகளில் சால்மோனெல்லா இருக்கலாம். சுத்தமாகவும் உடைக்கப்படாமலும் இருக்கும் முட்டைகளில் கூட இந்த நுண்ணுயிரிகள் இருக்கலாம்.

அதனால்தான் பாஸ்ச்சுரைஸ் செய்யப்பட்ட அல்லது வேகவைத்த முட்டைகள் சிறந்தது என்கிறோம். முட்டையை வேகவைக்கும் போது அதன் வெள்ளைக்கரு மற்றும் மஞ்சள் கரு கெட்டியாகும் வரை வேகவைக்க வேண்டும் என சி.டி.சி.பி. பரிந்துரைக்கிறது. அதே போல் அதை சேமித்துவைக்கும் போது குளிர்சாதன பெட்டியை சரியான வெப்பநிலையில் வைக்க அறிவுறுத்தப்படுகிறது.

முட்டைகளை முடிந்தவரை புதிதாக உட்கொள்ள வேண்டும் என்கிறார் மருத்துவ உணவியல் நிபுணர் நீதா திலீப். “முட்டைகளை வைத்திருக்கும் போது ஒவ்வொரு நாளும் அதன் தரம் குறைந்துகொண்டே வரும். சில நேரங்களில் அவ கெட்டுவிடும். அப்போது பல தொற்றுகள் இவற்றுடன் வருகின்றன. அதனால், கடையில் முட்டை வாங்கும் போது, அவை புதிதாக வந்தவையா என்பதை அவ்வப்போது சரிபார்ப்பது நல்லது,” என்று அவர் கூறினார்.



**5. பச்சை மீன்**

பச்சை மீனில் பாக்டீரியா மற்றும் சில வைரஸ்கள் இருக்கலாம். இவை சாதாரண நோய் மட்டுமல்லாது, மரணத்தை விளைவிக்கும் நோயை ஏற்படுத்தும் ஆபத்து நிறைந்தவையாகக் கூட இருக்கலாம்.

அதனால்தான் மீன்களை நன்கு சுத்தம் செய்த பிறகே சமைத்து சாப்பிட வேண்டும் என்று சி.டி.சி.பி. பரிந்துரைக்கிறது.

“அசுத்தமான நீரில் வளர்க்கப்படும் இறால் மற்றும் மீன்களில் நோரோவைரஸ் என்ற நுண்கிருமி காணப்படுகிறது. அதனால்தான் மீனின் பச்சை வாசனை மறையும் வரை அவற்றை சுத்தம் செய்து சமைக்க வேண்டும்,” என்று சி.டி.சி.பி. கூறுகிறது.

மீன் வாங்கும் போது அது எங்கு வளர்க்கப்பட்டது என்பதைக் கூட மீன் விற்பனையாளரிடம் கேட்கலாம் என டாக்டர் பிரதிபா லக்ஷ்மி பரிந்துரைக்கிறார்.

“இப்போது நிறைய மீன்கள் ஆரோக்கியமற்ற மற்றும் மாசுபட்ட சூழலில் வளர்க்கப்படுகின்றன. இத்தகைய மீன்களை உண்பதால் பல நோய்த்தொற்றுகள் ஏற்படும். பச்சை மீனை எப்போதும் உண்ணக்கூடாது. நாம் வாங்கும் மீன்கள் எப்படி வளர்க்கப்படுகின்றன? கொடுப்பவர்களின் கைகள் எவ்வளவு சுத்தமாக இருக்கும்? இதுபோன்ற விஷயங்களை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்,” என்று அவர் கூறுகிறார்.

**6. பயறுகளை முளைகட்டும் போது கவனமாக இருக்க வேண்டும்**

முளைகட்டிய பயறுகள் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லவை. இருப்பினும், அவை வளர சூடான மற்றும் ஈரப்பதமான சூழல் தேவை. இதே சூழலில் நுண்ணுயிரிகளும் வேகமாக வளர்கின்றன. இதில் சால்மோனெல்லா போன்ற பாக்டீரியாக்கள் இருக்கலாம்.

நாம் எவ்வளவு காலம் அவற்றை முளைகட்டி வைத்திருந்தோம், அது எவ்வளவு காற்றோட்டமான பகுதியில் வைக்கப்பட்டிருந்தது என்பன போன்ற காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று டாக்டர் பிரதீபா லட்சுமி கூறினார். “முளை கட்டிய பயறுகளை அதிக நேரம் ஈரமாக வைத்திருக்கக் கூடாது. குறிப்பாக, காற்றோட்டம் இல்லாத இடத்தில் அதிக நேரம் வைக்கக் கூடாது. அப்பகுதியில் இருக்கும் காற்று வெளியேறினால், பெரும்பாலான நுண்ணுயிரிகள் வளர வாய்ப்பில்லை,” என்று அவர் கூறினார்.

**7. நீண்ட நாட்கள் சேமிக்கப்பட்ட மாவு**

நீண்ட நாட்களாக சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கோதுமை மாவில் மோசமான நுண்ணுயிரிகளும் இருக்கலாம். அதனால்தான் எந்த ஒரு மாவையும் பச்சையாக சாப்பிட வேண்டாம் என்று சி.டி.சி.பி. அறிவுறுத்துகிறது.

உணவியல் நிபுணர் நீதா திலீப் பேசுகையில், எந்த ஒரு மாவும் எவ்வளவு புதிதாக (ஃப்ரெஷ்ஷாக) இருக்கிறதோ, அவ்வளவு தூரம் ஆரோக்கியத்துக்கும் நல்லது என்றார். “எந்தப் பழத்தையும், காய்கறிகளையும் அதிக நேரம் வீட்டில் வைக்கக் கூடாது. நேரம் செல்ல செல்ல இவற்றில் நுண்ணுயிர்கள் வளர்ந்துகொண்டே இருக்கும். இதனால், தொற்று நோய் பரவும் ஆபத்து உள்ளது” என்றார்.

இருப்பினும், உணவு நச்சுத்தன்மைக்கு பயந்து எந்த பாக்டீரியாவையும் தவிர்க்க தீவிர சுகாதாரத்தைப் பின்பற்றுவது நல்லதல்ல என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

“எல்லா வகை பாக்டீரியாவும் எப்போதும் தீங்கு விளைவிப்பதில்லை. இதனால் நமது நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. நம் வயிற்றில் பல பாக்டீரியாக்கள் உள்ளன. இவை உயிருக்கு ஆபத்தான நோய்த்தொற்றுகளிலிருந்து நம்மைக் காக்கின்றன,” என்கிறார் டாக்டர் பிரதிபா லட்சுமி. ●

# இன்னும் ஒரு வருடத்துக்குக்கூட இந்த அரசாங்கம் நிலைக்காது!

## குமார வெல்கம எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

அரசாங்கம் இன்னும் ஒரு வருடத்துக்குக்கூட நிலைக்காது என்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அத்துடன், ராஜபக்ஷக்களின் பிடிக்குள் இருப்பதனாலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தேசிய அரசாங்கத்துக்குக்கூட செல்ல முடியாதுள்ளது என்றும் கூறினார்.

நவலங்கா சுதந்திரக் கட்சி பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தான் 40 வருடங்களாக ராஜபக்ஷவுடன் இருந்தார் என்றும் அதனால் இது தொடர்பில் தனக்கு நன்றாகத் தெரியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனக்கு ஏற்றவாறு அமைச்சரவையை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையிலேயே ஜனாதிபதி தற்போது உள்ளார். இதேவேளை, ரணில் விக்ரமசிங்கவால் நாட்டை தனியாக வழிநடத்திச்செல்ல முடியாது. அரசாங்கம் இன்னும் ஒரு வருடத்துக்குக்கூட நிலைக்காது என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம இதன்போது சவால் விடுத்தார். (ஐ)

# பயங்கவரவாதிகள்போல குரங்குகள் விளைநிலங்களை ஆக்கிரமித்துள்ளன

## எதிர்க்கட்சி உறுப்பினர் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 10

பயிர்செய்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் குரங்குகளின் செயற்பாட்டை பயங்கரவாத செயல்பாடாக கருத வேண்டும். நகரம், கிராமம், விளை நிலங்கள் அனைத்தையும் குரங்குகள் பயங்கரவாதிகளை போல் ஆக்கிரமித்துள்ளன. ஆகவே, குரங்குகளை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம் என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிர்க்கட்சியின் உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

குரங்கு, மயில் உட்பட காட்டு விலங்குகளால் விவசாய பயிர்களுக்கு ஏற்படும் சேதம் பாரதூரமான பிரச்னையாக காணப்படுகிறது. விவசாயத் துறை வீழ்ச்சியடைவதற்கு இந்த காட்டு விலங்குகள் பிரதான பங்கு வகிக்கின்றன. நகரம், கிராமம், உட்பட ஒட்டு மொத்த விளை நிலங்களையும் குரங்குகள் பயங்கரவாதிகளை போல் ஆக்கிரமித்து நாசம் செய்கின்றன.

பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் குரங்குகள், காட்டு விலங்குகளை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் போது புலம் பெயர் அமைப்புக்களிடமிருந்து டொலர் பெறும் சுற்றாடல் துறை நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் கடுமையான எதிர்ப்பை தெரித்துள்ளார்கள். நாட்டில் 70 சதவீதமான விவசாயிகள் உள்ளார்கள்.

குரங்குகளை ஏதாவதொரு வழிமுறையில் கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறார்கள். ஆகவே, டொலருக்காக செயல்படும் சுற்றாடல் நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய தேவையில்லை.

கிராமப்புறங்களில் உள்ள தென்னை மரங்கள் உட்பட வீட்டு சுற்றத்தில் உள்ள மரங்களை கூட குரங்குகள் விட்டு வைப்பது இல்லை. கிராமப் புறங்களில் வாழும் மக்கள் இந்த பாரதூர தன்மையை அறிவார்கள். கொழும்பில் குளிர் அறையில் இருந்துக் கொண்டு கருத்து உரைப்பவர்களுக்கு நடைமுறையில் இருக்கும் பிரச்னை ஏதும் தெரியாது.

ஆகவே குரங்குகளின் செயற்பாட்டை பயங்கரவாத செயற்பாடாக கருதி கடுமையான நடவடிக்கைளை வெகுவிரை வில் எடுக்க வேண்டும். இந்த பிரச்னைக்கு அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுக்கு எதிர்க் கட்சியின் சுயாதீன உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார்.

# 20 ஆயிரம் தொன் யூரியாவுடன் கப்பல் இன்று நாட்டுக்கு வருகிறது

கொழும்பு, ஜூன் 10

20 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை ஏற்றிய கப்பல் இன்று சனிக்கிழமை நாட்டை வந்தடையவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

11,250 மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிய மற்றுமொரு கப்பல் எதிர்வரும் நாட்களில் நாட்டுக்கு வரும் என்று விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க கூறினார்.

இதன்மூலம் சிறுபோகத்துக்கு தேவையான யூரியா உரம் முழுமையாகக் கிடைக்கும் எனவும் சிறுபோகத்துக்கு தேவையான அடிக்கட்டு பசளை கையிருப்பில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், தட்டுப்பாடின்றி உரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உர கொள்வனவுக்காக விவசாயிகளுக்கு 60வீத கூப்பன்கள் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

# தேர்தலை நடத்துமாறு கோரிய மனு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 10

உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதன் ஊடாக பொது மக்களின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பாளிக்கக் கோரி தேசிய மக்கள் சக்தி, பவ்ரல் அமைப்பு என்பன தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா? இல்லையா? என்ற தீர்ப்பு திகதி அறிவிக்கப்படாமல் உயர் நீதிமன்றால் பிற்போடப்பட்டுள்ளது.

குறித்த மனு மீதான பரிசீலனை நேற்று வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றத்தில், நீதியரசர்களான புவனேக அலுவிகார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, முர்து பெர் னாண்டோ மற்றும் காமினி அமரசேகர ஆகிய ஐவர் அடங்கிய ஆயத்தின் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. உள்ராட்சி மன்ற தேர்தல் கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெற விருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ)






# மட்டக்களப்பு மாவட்டத்தில் 71 மாடுகளுக்கு அம்மை!

மட்டக்களப்பு, ஜூன் 10

**நாடு முழுவதிலும் மாடுகளுக்கு பரவி வரும் நோயானது மட்டக்களப்பு மாவட்டத்திலும் பரவியுள்ளது. இதுவரை 71 மாடுகளுக்கு இந்நோய் பரவியுள்ளது என்று தெரிவித்த கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட பிரதி பணிப்பாளர் மருத்துவர் திருமதி உதயராணி குகேந்திரன், ஆனால் இறப்பு ஏற்படவில்லை எனக் குறிப்பிட்டார்.**

செங்கலடி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேச செயலகப்பிரிவுகளில் அதிகம் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவற்றை இல்லாதொழிக்க எமது திணைக்களத்தினால் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



மாட்டிறைச்சியைப் பொது மக்கள் உணவாக உட்கொள்வது தொடர்பாக அந்தந்த உள்ளூராட்சிச் சபை பிரிவுகளிலுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களே தீர்மானிப்பர்.அறுவைக்கு கொண்டுவரப்படும் மாடுகள் பரிசோதனை செய்யப்பட்டு நோய் பரவாத மாடுகள் என சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்தினால் இறைச்சிக்காக பயன்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# மட்டக்களப்பில் கடற்றொழிலாளருக்கு இலவச மண்ணெண்ணெய் விநியோகம்

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பில் தெரிவுசெய்யப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு இலவச மண்ணெண்ணெய் வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மட்டக்களப்பு, பாலமீன்மடு மீனவர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்றது.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சுதாகரன் சியாந் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதற்கட்டமாக 86 மீனவர்களுக்கு தலா 75 லீற்றர்படி இலவச மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தம்பிப்பிள்ளை சிவானந்தராஜா, மாவட்ட மீனவர் சம்மேளனத் தலைவர் நற்குணநாதன் பத்மநாதன் மற்றும் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

# திருமலை வைத்தியசாலைக்கு மருந்து பொருட்கள் கையளிப்பு




திருமலை, ஜூன் 10

வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரனையில் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மருந்துப்பொருட்கள் நேற்று கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கு இணங்க கண் சத்திர சிகிச்சை நோயாளர்களின் நலன் கருதி கண் வில்லைகள் வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைப் பணிப்பாளர் எம்.ரீ.எம். பாரிஸினால் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எல்.டபிள்யு. ஜயவிக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டன.

இவ் மருந்துப்பொருட்கள் ஐக்கிய அமெரிக்காவில் உள்ள வைத்தியர் வானி பிரேம்ஜிட் குடும்பத்தார் மற்றும் அவுஸ்திரேலியாவில் உள்ள ஈஸ்வரி ஜெகநாதன் குடும்பத்தினரின் நிதி அனுசரணையில் வன்னி ஹோப் இலங்கை அலுவலகத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கண் சத்திர சிகிச்சை பிரிவு வைத்திய நிபுணர் மற்றும் வன்னி ஹோப் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஐஸ் போதைப்பொருள் பஸ்ஸினுள் சிக்கியது

திருமலை, ஜூன் 10

திருகோணமலை ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள வெருகல் பாலத்தில் வைத்து அம்பாறை -முல்லைத்தீவு தனியார் பஸ்ஸொன்றை இடைமறித்து நேற்று வெள்ளிக்கிழமை காலை சோதனையிட்டபோது ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 34 கிராம் 650 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 31 வயதுடைய சேருநுவர பகுதியைச் சேர்ந்த பஸ் சாரதியும், பஸ் நடத்துநரும் ஈச்சிலம்பற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பஸ் ஈச்சிலம்பற்று பொலிஸில் வைக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் மாவட்ட சிறுவர் சபை மீளமைப்பு

மட்டக்கலப்பு, ஜூன் 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாவட்ட சிறுவர் சபை உறுப்பினர்கள் தெரிவு, உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

சிறுவர் உரிமை மேம்பாட்டுத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், 14 பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களில் இருந்து சிறுவர் சபைக்கான உறுப்பினர்கள் வாக்கெடுப்பு மூலம் தலைவர், உப தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் தெரிவு செய்யப்பட்டனர்.




சிறார்களின் பங்கேற்பு உரிமையை மேம்படுத்துவதற்கு உதவும் முகமாக இச்சபை இரு வருடம் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்வில் மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ரீ. மதிராஜ், பதவி நிலை உதவியாளர் எம். ரிலா, ஏயு லங்கா நிறுவன இணைப்பாளர் நந்தகுமார் மற்றும் 14 பிரதேச சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

# ஜனநாயக பங்குதாரர்களை ஒன்றிணைத்தல் செயல்திட்டம்

## திருமலையில் முன்னெடுப்பு



திருமலை, ஜூன் 10

“ஜனநாயக பங்குதாரர்களை ஒன்றிணைத்தல்” செயற்திட்டத்தின் திருகோணமலையைச் சேர்ந்த கீழ் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான இரண்டு நாள் பயிற்சி நெறியின் முதல்நாள் நிகழ்வு நேற்று திருகோணமலையிலுள்ள தனியார் விடுதியொன்றில் ஆரம்பமானது.

அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பயிற்சி நெறியின் வளவாளராக எம்.மிருனாளன் கலந்துகொண்டு பயிற்சியாளர்களுக்கு தெளிவூட்டல்களை வழங்கினார்.

இரண்டாவது நாளாக இன்றும் இப் பயிற்சிநெறி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இயற்கை வள சுரண்டலுக்கு எதிராக வாகரையில் பேரணி

மட்டக்களப்பு, ஜூன் 10

சர்வதேச சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு வாகரை பிரதேசத்தில் இடம்பெறும் இயற்கை வளச் சுரண்டல்களை நிறுத்தக் கோரிய கண்டன பேரணி நேற்று முன்தினம் வியாழக்கிழமை வாகரை பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றது.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கண்டன பேரணியில் வாகரை பிரதேசத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலும் இருந்து மக்கள் கலந்துகொண்டனர்.

கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய பிரதேச மக்கள் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் வரை வாகரை - திருமலை வீதி வழியாக ஊர்வலமாக சென்றனர்.

இதன்போது, ‘பொறுப்பான அதிகாரிகள் பொறுப்பாக நடக்க வேண்டும்.’ ‘மண் மாபியாக்களுக்கு பின்னால் இருப்பது யார்.?’ ‘அரசே வளச் சுரண்டலுக்கு எதிராக சட்டங்களை அமுல்படுத்து.’ ‘இறைவன் கொடுத்த வளங்களை சுரண்ட இவர்கள் யார்? ‘உங்கள் வாழ்விற்காக எங்கள் வளங்களை சுரண்டாதே,’ ‘இயற்கையை நாம் அழித்தால் இயற்கை நம்மை அழிக்கும்,’ ‘எமது எதிர்கால சுதந்திரத்திற்காக இயற்கையை பாதுகாப்போம்.’ ‘அளவிற்கு அதிகமான வளச் சுரண்டலுக்கு அதிகாரம் கொடுத்தது யார்? ‘ஏழைகளின் வாழ்கையை அழிக்காதே வளங்களைச் சுரண்டாதே’ என்பன போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை கைகளில் ஏந்தியிருந்தனர்.

கண்டனப் பேரணியின் இறுதியில் வாகரை கதிரவெளியில் மேற்கொள்ளப்படவுள்ள இல்மனைட் அகழ்வினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள், இறால் பண்ணை ஆரம்பிப்பதால் ஏற்படக் கூடிய விளைவுகள், சட்ட விரோத மணல் அகழ்வுகளினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான விடயங்கள் அடங்கிய கோரிக்கை அங்கு ஒன்று கூடியவர்கள் மத்தியில் வாசித்துக் காட்டப்பட்டது.

பின்னர் இயற்கை வளச் சுரண்டல்களை நிறுத்தக் கோரிய மகஜர் பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோர்களுக்கு வேண்டுகோளிட்டு வாகரை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் ஜி.பிரணவனிடம் கையளிக்கப்பட்டது. (அ)

# பாப்பரசருக்கு நடைபெற்ற அறுவைச் சிகிச்சை வெற்றி



ரோம், ஜூன் 10.
பாப்பரசருக்கு மேற்கொள்ளப்பட்ட குடல் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ் அண்மைக்காலமாக கடுமையான வலியாலும், குடல் அடைப்புகளாலும் அவதிப்பட்டு வந்தார்.

அவர் ரோமில் உள்ள ஜெமெல்லி வைத்தியசாலையில் 2 தினங்களுக்கு முன்பு மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டார்.

அப்போது அவர் குடல் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுமாறு மருத்துவர்கள் பரிந்துரைத்தனர்.


அதன்பேரில் கடந்த புதன்கிழமை அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மயக்க மருந்து கொடுத்து, குடல் இறக்கத்தைச் சரி செய்ய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இந்த அறுவை சிகிச்சை 3 மணி நேரம் இடம்பெற்றுள்ளது.

பாப்பரசருக்கு நடந்த அறுவைச் சிகிச்சை வெற்றி பெற்றுள்ளது என வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

அவருக்கு எந்தச் சிக்கலும் இல்லை. வேறு நோய் எதுவும் கண்டறியப்படவில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (அ)

# சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் யாழ்ப்பாண தமிழர்



சிங்கப்பூர், ஜூன் 10
சிங்கப்பூரில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட சிங்கப்பூர் மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் களம் இறங்கவுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊரெழு மற்றும் உரும்பிராய்ப் பகுதியை தாய் தந்தையர் பிறப்படமாகக் கொண்ட சிங்கப்பூரின் மூத்த அமைச்சரான தர்மன் சண்முகரத்தினம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக மக்கள் செயல் கட்சியில் இருந்து இராஜினாமா செய்வதுடன் தனது அமைச்சர் பதவியிலிருந்தும் விலகவுள்ளார்.

அவர் சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் துணைத் தலைவர், பொருளாதார மேம்பாட்டு வாரியத்தின் சர்வதேச ஆலோசனைக் குழுவின் தலைவர் பதவிகளில் இருந்து விலகுவார் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தண்ணீருக்காக தவிக்கும் உக்ரைன் நாட்டு மக்கள்!

## மிதக்கும் சடலங்களால் புதிய நெருக்கடி

கீவ், ஜூன் 10

**ரஷ்யா முக்கிய அணை ஒன்றை சேதப்படுத்தியுள்ளதாகக் கூறப்படும் நிலையில் தற்போது உக்ரேனிய மக்கள் குடிதண்ணீருக்காக தத்தளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**



இந்நிலையில் உக்ரைனின் நோவா ககோவ்கா அணை சேதமடைந்துள்ளது. இதனால் டினிப்ரோ ஆற்றின் குறுக்கே 4.8 பில்லியன் கேலன் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. பல கிராமங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளது.

கெர்சன் நகரின் சில பகுதிகள் முற்றிலும் நீருக்கடியில் காணப்படுகிறது. பல குடியிருப்புகளின் கூரை மட்டுமே வெளியே தெரியும் அளவுக்கு எஞ்சியுள்ளது. ஆனால் சேதமடைந்துள்ள அணையில் இருந்து தண்ணீர் தற்போதும் வெளியேறிய நிலையில் உள்ளது.

மேலும் வெள்ளத்தால் 42,000 பேர் ஆபத்தில் இருப்பதாக உக்ரைன் மதிப்பிட்டுள்ளது.

மக்கள் கூரை மீதேறி தப்பிக்க அதிகாரிகள் தரப்பு அறிவுறுத்தி வருகின்றனர். சில பகுதிகள் மின்சாரம் துண்டிக்கப்பட்டு பரிதாப நிலையில் விடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குடிதண்ணீர் மாசுபாடு பற்றிய அச்சமும் அதிகரித்து வருகிறது. பெருவெள்ளம் கல்லறை பகுதிகளில் புகுந்துள்ளதால் சடலங்களால் தண்ணீர் பாதிக்கப்பட்டுள்ளது. மட்டுமின்றி அணையில் இருந்து 150 தொன் இயந்திர எண்ணெய் டினிப்ரோ ஆற்றில் கலந்துள்ளது.

இருப்பினும் நேற்று முன்தினம் நகர மறுத்து வீடுகளில் தங்க விரும்பிய பொதுமக்கள் சிலர் தற்போது வெள்ளத்தில் சிக்கியுள்ளனர். கெர்சன் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்களை வெளியேற்ற உக்ரேனிய அதிகாரிகள் முயற்சி எடுத்துள்ளனர். (அ)

# ட்ரம்ப் மீது குற்றப்பத்திரம்!



நியூயோர்க், ஜூன் 10
அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறும்போது, இரகசிய ஆவணங்களை தவறாக கையாண்டதாக அவர் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மியாமியில் உள்ள பெடரல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு எனக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது என டிரம்ப் தெரிவித்தார்.

'அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு இப்படி ஒரு சம்பவம் நடக்கும் என்று நான் நினைக்கவே இல்லை' என ட்ரம்ப் குறிப்பிட்டார்.

ஏப்ரல் மாதம், ஆபாச பட நடிகைக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில் குற்றப்பத்திரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, ட்ரம்ப் கிரிமினல் குற்றம் சாட்டப்பட்ட முதல் அமெரிக்க ஜனாதிபதியானார்.

கடந்த வியாழக்கிழமை புதிய குற்றப்பத்திரத்தைத் தொடர்ந்து ட்ரம்ப் வெளியிடப்பட்ட வீடியோவில், 'நான் எந்த தவறும் செய்யவில்லை. நான் ஒரு அப்பாவி மனிதன்'-என்றார். (அ)



# இத்தாலிப் பாராளுமன்றத்தினுள் தாய்ப்பால் ஊட்டிய முதல் பெண்

ரோம், ஜூன் 10
இத்தாலி பாராளுமன்ற உறுப்பினர் கில்டா ஸ்போர்டியெல்லோ அந்நாட்டின் பாராளுமன்றத்தில் தாய்ப்பால் ஊட்டிய முதல் அரசியல்வாதி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

ஜனரஞ்சகமான மூவிமென்டோ 5 ஸ்டெல்லின் உறுப்பினரான ஸ்போர்டியெல்லோ, கடந்த புதன்கிழமை கீழ் சபையில் பொது நிர்வாக வாக்கெடுப்பின்போது, தன்னுடைய இரண்டு மாத மகன் பெடரிகோவுக்கு பாராளுமன்றத்தின் உயர் ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு தாய்ப்பாலூட்டியுள்ளார்.

இந்த நிகழ்வு பல நாடுகளில் மிகவும் பொதுவானதாக இருக்கும், ஆனால் பாரம்பரியமாக ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் இத்தாலியில் இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் துணை ஆளுநரின் இறுதிச்சடங்கில் குண்டுவெடிப்பு

## 11 பேர் உயிரிழப்பு

காபூல், ஜூன் 10
வடக்கு ஆப்கானிஸ்தான் பைசாபாத்தில் உள்ள நபாவி மசூதி அருகே நேற்று முன்தினம் நடைபெற்ற தலிபான் மாகாண துணை ஆளுநரின் இறுதிச்சடங்கில் குண்டுவெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.



கடந்த செவ்வாய்க்கிழமை ஆப்கானிஸ்தான் மாகாண ஆளுநர் அகமது அஹ்மதி தற்கொலைப் படைத் தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டார்.

இவரது கொலைக்கு ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இதில் அகமது உள்பட அவரது கார் சாரதியும் கொல்லப்பட்டதுடன் 6 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் தலிபான் மாகாண துணை ஆளுநரின் இறுதிச்சடங்கில் பொலிஸ் அதிகாரிகள் உட்பட முக்கிய தலைவர்கள் பலர் பங்கேற்று இருந்த நிலையில் குறித்த குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இதில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற அச்சம் இருப்பதாக உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# எங்கள் தலைமுறையின் சிறந்த வீரர் ஸ்ரீவ் ஸ்மித்!

## விராட் கோலி புகழாரம்




லண்டன், ஜூன் 10

இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிகள் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடி வருகின்றன. இந்நிலையில், அவுஸ்திரேலிய அணியின் வீரர் ஸ்ரீவ் ஸ்மித்தை இந்திய வீரர் விராட் கோலி புகழ்ந்துள்ளார்.

இந்த போட்டியின் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 469 ஓட்டங்களை குவித்தது. பதிலுக்கு ஆடி வரும் இந்தியா தடுமாறி வருகின்றது.

முதல் இன்னிங்ஸில் ஸ்மித் 268 பந்துகளில் 121 ஓட்டங்கள் குவித்திருந்தார். அவுஸ்திரேலிய அணி சரிவை எதிர்கொண்ட வேளையில் ஹெட் உடன் வலுவான இணைப்பாட்டம் அமைத்து அசத்தினார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவின் ஆதிக்கம் இந்தப் போட்டியில் அதிகரித்தது.

"எங்கள் தலைமுறையின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் என்றால் அது ஸ்டீவ் ஸ்மித்தான். அதில் துளியும் சந்தேகம் இல்லை. ஆட்டத்தின் சூழலுக்கு ஏற்ப தகவமைப்பது, களத்தின் நிலைக்கு ஏற்ப விளையாடுவது என அவரின் திறனுக்கு முன்னர் யாராலும் ஈடுகொடுக்க முடியாது.

அவர் படைத்துள்ள சாதனைகளே அது குறித்து உரக்கப் பேசும். சுமார் 90இற்கும் மேற்பட்ட டெஸ்ட் போட்டிகளில் அவரின் சராசரி 60 என இருப்பது நம்ப முடியாத ஒன்று. அவரின் விக்கெட்டை கைப்பற்றுவது பெரிய சவால். அவர் அபார வீரர்" என கோலி தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஸ்மித்

34 வயதான ஸ்மித் கடந்த 2010 முதல் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் விளையாடி வருகிறார். தற்போது நடைபெற்று வரும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியின் முதல் இன்னிங்ஸுடன் சேர்த்து மொத்தம் 170 இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியுள்ளார். 8,913 ஓட்டங்கள் குவித்துள்ளார். 37 அரைச்சதங்கள், 31 சதங்கள் பதிவு செய்துள்ளார். அதிகபட்சமாக 239 ஓட்டங்கள் குவித்துள்ளார். (ஐ)

## பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ்

# ஸ்வியாரெக், முச்சோவா இறுதிக்கு முன்னேறினர்

பாரிஸ், ஜூன் 10

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் இறுதியாட்டத்துக்கு ஸ்வியாரெக், முச்சோவா ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடக்கிறது.

இதில் நேற்று நடந்த மகளிர் அரையிறுதி போட்டியில் சபலெங்கா, கரோலினா முச்சோவாவை எதிர்கொண்டார். இதில், 7-6, 6-7, 7-5 என்று 2-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சபலெங்காவை வீழ்த்தி முச்சோவா இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய முதல் வீராங்கனை என்கிற பெருமையை பெற்றுள்ளார் முச்சோவா. மற்றோர் ஆட்டத்தில், பிரேசில் வீராங்கனை பீட்ரில் ஹாடட் மையாவை எதிர்கொண்ட போலந்து வீராங்கனை இகா ஸ்வியா ரெக் 6-2, 7-6 என்ற செற் கணக்கில் வென்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.



# ஒருநாள் உலகக் கிண்ணம் இலங்கை அணி அறிவிப்பு

## மத்தியூஸுக்கு வாய்ப்பு மறுப்பு

கொழும்பு, ஜூன் 10

சிம்பாப்வேயில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள 10 நாடுகளுக்கு இடையிலான ஒருநாள் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுக்கு 15 வீரர்கள் அடங்கிய இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகுதிகாண் சுற்றை முன்னிட்டு இலங்கை அணியைப் பலப்படுத்தும் நோக்கில் திமுத் கருணாரட்ன, அஞ்சலோ மத்தியூஸ் ஆகிய இருவரும் ஆப்கானிஸ்தானுடனான போட்டியில் இணைக்கப்பட்டிருந்தனர்.

இதில், சிறப்பாக செயல்பட்ட திமுத் அணியில் தனது இடத்தைத் தக்க வைத்தார். ஆனால், அஞ்சலோ மெத்யூஸ் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறியதால் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுக்கான இலங்கை அணியில் இடம் பிடிக்கத் தவறினார்.

இலங்கை அணி விவரம்:

தசுன் சானக (தலைவர்), குசல் மெண்டிஸ் (உப தலைவர்), பதும் நிஸங்கக, திமுத் கருணாரட்ன, சதிர சமரவிக்ரம, தனஞ்சய டி சில்வா, சரித் அசலங்க, வனிந்து ஹசரங்க டி சில்வா, மஹீஷ் தீக்ஷன, துஷான் ஹேமந்த, சாமீக கருணாரட்ன, துஷ்மந்த சாமீர, மதீஷ பத்திரண, லஹிரு குமார, கசுன் ராஜித. (ஐ)



# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இந்திய அணி தடுமாற்றம்!

லண்டன், ஜூன் 10

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியின் இறுதியாட்டத்தில் முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி 151 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

உலக டெஸ்ட் கிரிக்கெட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதி வருகின்றன.

லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்டம் முடிவில் 85 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 327 ஓட்டங்கள் குவித்தது. டிராவிஸ் ஹெட் 146, ஸ்டீவ் ஸ்மித் 95 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த ஜோடி நேற்று 2ஆவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்து விளையாடியது. ஸ்ரீவ் ஸ்மித் 229 பந்துகளில்,16 பௌண்ட்ரிகளுடன் தனது 31ஆவது சதத்தை விளாசினார். டிராவிஸ் ஹெட் 174 பந்துகளில் ஒரு சிக்ஸர், 25 பௌண்ட்ரிகளுடன் 163 ஓட்டங்கள் விளாசிய நிலையில் முகமது சிராஜ் பந்தில் வெளியேறினார். 4ஆவது விக்கெட்டுக்கு ஸ்மித்துடன் இணைந்து டிராவிஸ் ஹெட் 285 ஓட்டங்கள் சேர்த்தார்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய கமரூன் கிறீன் 6 ஓட்டங்களில் முகமது ஷமி பந்தில் 2ஆவது 'ஸ்லிப்' திசையில் நின்ற ஷுப்மன் கில்லிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். நிதானமாக விளையாடி வந்த ஸ்மித் 268 பந்துகளில் 19 பௌண்ட்ரிகளுடன் 121 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷர்துல் தாகூர் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். இதன் பின்னர் களம் புகுந்த அலெக்ஸ் ஹாரி அதிரடியாக விளையாடினார்.

மிற்செல் ஸ்ரார்க் 5 ஓட்டங்களில் அக்சர் பட்டேலின் குறிதவறாத எறியால் 'ரன் அவுட்' ஆனார். துடுப்புமட்டையை சுழற்றிய அலெக்ஸ் கேரி 69 பந்துகளில், ஒரு சிக்ஸர், 7 பௌண்ட்ரிகளுடன் 48 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜடேஜா பந்தில் எல். பி. டபிள்யூ. ஆனார். அவரைத் தொடர்ந்து நதன் லயன் 9, பட் கம்மின்ஸ் 9 ஓட்டங்களில் வெளியேற அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 121.3 ஓவர்களில் 469 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இந்திய அணி தரப்பில் முகமது சிராஜ் 4 விக்கெட்களையும், முகமது ஷமி, ஷர்துல் தாகூர் ஆகியோர் தலா 2 விக்கெட் களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து துடுப்பாட்டத்தைத் தொடங்கிய இந்திய அணி விரைவு கதியில் ஓட்டங்களை சேர்க்க முயன்றது. அணித் தலைவர் ரோஹித் சர்மா 26 பந்துகளில், 2 பௌண்ட்ரிகளுடன் 15 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பட் கம்மின்ஸ் பந்தில் எல். பி. டபிள்யூ. ஆனார். ஷுப்மன் கில் 13 ஓட்டங்களில் ஸ்கொட் பொலண்ட் பந்திலும், சேதேஷ்வர் புஜாரா 14 ஓட்டங்களிலும் கமரூன் கிறீன் பந்திலும் வெளியேறினர். விராட் கோலி 31 பந்துகளில், 2 பௌண்ட்ரிகளுடன் 14 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மிற்செல் ஸ்டார்க் பந்தில் ஸ்மித்தின் அபாரமான பிடியெடுப்பால் நடையை கட்டினார்.

71 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்த நிலையில் அஜிங்க்ய ரஹானே, ரவீந்திர ஜடேஜா இணை தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தியது. ஜடேஜா 51 பந்துகளில் 48 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். நிலையாக ஆடி வந்த அவர் லயன் பந்தில் விக்கெட்டை இழந்தார்.

38 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் இந்திய அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 151 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

ரஹானே 29 ஓட்டங்களுடனும், பரத் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர். (ஐ)

# 42 மில்லியன் ரூபாய் பெறுமதியான 128 கிலோ கேரளக் கஞ்சா சிக்கியது!

## வெற்றிலைக்கேணியில் கடற்படை அதிரடி





**யாழ்ப்பாணம், ஜூன் 10**

**வடமராட்சி, வெற்றிலைக்கேணிப் பகுதியில் 42 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள கேரளக் கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றினர்.**

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 128 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சா கடலில் சிக்கியது.

விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான 04 சாக்கு மூடைகளை மீட்டதுடன் அதில் இருந்து 53 பார்சல்களில் சுமார் 128 கிலோ 100 கிராம் கேரள கஞ்சா இருந்தது.

தொடர்ச்சியான கடற்படை நடவடிக்கைகள் காரணமாக, கேரளக் கஞ்சாவை கொண்டு வர முடியாமல் கடத்தல்காரர்கள் கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இதற்கிடையில், கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு 42 மில்லியன் ரூபாய் எனக் கருதப்படுகிறது. (அ)

# 10 அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்கிறது சதொச

கொழும்பு, ஜூன் 10

10 அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோ கிராம் பாசிப்பயறின் விலை 325 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளது. இதன்படி, ஒரு கிலோ கிராம் பாசிப்பயறின் புதிய விலை 1,225 ரூபாவாக குறைக்கப்படவுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் காய்ந்த மிளகாயின் விலை 60 ரூபாவினால் குறைக்கப்பட்டு 1,290 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

பருப்பு கிலோ ஒன்றின் விலை 15 ரூபாவினால் குறைக்கப்பட்டு 299 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், சிவப்பு நாட்டரிசி கிலோ ஒன்றின் விலை 200 ரூபாவாகவும், நெத்தலி கிலோ ஒன்றின் விலை 1,140 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 200 ரூபாவாகவும், சோயா மீட் கிலோ ஒன்றின் விலை 650 ரூபாவாகவும், சிவப்பு அரிசி கிலோ ஒன்றின் விலை 139 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் கடலையின் விலை 540 ரூபாவாகவும் குறைக்கப்படவுள்ளது. (அ)

# கருத்து சுதந்திரத்தை பாதுகாக்கவேண்டும்

## இலங்கையிடம் அமெ. வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 10

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை இலங்கை பாதுகாக்கவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'கருத்துச் சுதந்திரத்திற்குள்ள உரிமையே ஜனநாயகத்திற்கான முக்கியமான அம்சம் என, தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ள அமெரிக்க தூதுவர், ஒவ்வொரு குடிமகனுக்கும் கருத்துச் சுதந்திரம் உள்ளது என்றும் இந்த அடிப்படை உரிமையைப் பாதுகாப்பது, அனைத்து இலங்கையர்களுக்கும் நிலையான, பாதுகாப்பான மற்றும் வளமான எதிர்காலத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு மிகவும் அவசியம்' எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# யாழில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம்!



யாழ்ப்பாணம், ஜூன் 10

கன்னாதிட்டியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்கு நீதிமன்றம் 40,000 ரூபா தண்டம் விதித்துள்ளது.

கடந்த மே மாதம் 10ஆம் திகதி யாழ். மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்களின் வழமையான பரிசோதனையில் கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள ஓர் உணவகம் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து மே மாதம் 12ஆம் திகதி உணவக உரிமையாளருக்கு எதிராக மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் கடையை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகருக்கு உத்தரவிட்டார். பொதுச் சுகாதார பரிசோதகரால் கடை சீல் வைத்து மூடப்பட்டது.

நேற்று முன் தினம் நீதிமன்றில் வழக்கு மீள விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது உணவக உரிமையாளருக்கு 40,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் உணவக திருத்த வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதையடுத்து கடையை மீளத் திறப்பதற்கான அனுமதியையும் நீதிமன்றம் வழங்கியது. (அ)

# சப்ரகமுவ மாகாண ஆளுநராக நவீன் விரைவில் பதவியேற்பார்!



கொழும்பு, ஜூன் 10

சப்ரகமுவ மாகாணத்துக்கான புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க நியமிக்கப்படவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுள் ஒருவரான நவீன் திஸாநாயக்க நல்லாட்சியின்போது அமைச்சராக செயற்பட்டார்.

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் அவர் களமிறங்கியிருந்தாலும் பாராளுமன்றம் தெரிவாகவில்லை.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேக்கடுவ தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

2023 ஜூன் 10 ஆம் திகதி முதல் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையிலேயே சப்ரகமுவ மாகாணத்துக்கு புதிய ஆளுநராக நவீன் திஸாநாயக்க நியமிக்கப்படவுள்ளார். (அ)

# பரீட்சைக்கு தோற்றிய கைதி தப்பியோட்டம்

கொழும்பு, ஜூன் 10

கொலை மற்றும் கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவர் ஒருவர் சாதாரண தரப் பரீட்சைக்கு விடையளிக்கும்போது சிறைச்சாலை அதிகாரிகளிடம் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை தொடங்கஹவத்த பெத்மேகம பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

சாதாரணத் தரப் பரீட்சையின் இறுதி நாளான நேற்று முன் தினம் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் பரீட்சை நிலையத்துக்கு அழைத்து வரப்பட்ட கைதி பரீட்சைக்குத் தோற்றும்போது மலசலகூடத்திற்குச் செல்லவேண்டும் என மேற்பார்வையாளரிடம் தெரிவித்ததாகவும், அதன்படி சிறைச்சாலை அதிகாரி சந்தேக நபரை பரீட்சை மண்டபத்துக்கு அருகிலுள்ள கழிவறைக்கு அழைத்துச் சென்றதாகவும், அப்போது, சிறை அதிகாரியை தள்ளிவிட்டு அவர் தப்பியோடிவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சப்புகஸ்கந்த பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சப்புகஸ்கந்த பொலிஸார் அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# விவசாயிகளுக்கு மேலும் நிவாரணம் வழங்கப்படும்



கொழும்பு, ஜூன் 10

விவசாயிகளுக்கு வழங்கப்படும் உரங்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அரவீர தெரிவித்தார்.

அதனடிப்படையில் அடுத்த வாரம் முதல் யூரியா உரம் மூடையொன்றை 9,000 ரூபாவுக்கு வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் தற்போது 19,500 ரூபாவாக விற்பனை செய்யப்படும் எம்.வி.பி உரம் மூடையொன்றின் விலையை 4500 ரூபாவினால் குறைத்து 15,000 ரூபாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உர நிவாரணமாக வழங்கப்படும் நிதியை அடுத்த போகம் முதல் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இதனால் விவசாயிகள் தமக்குத் தேவையான உரங்களை எந்தப் பிரதேசத்திலும் கொள்வனவு செய்து கொள்ள முடியும் எனவும், 25000 மெற்றிக் தொன் உரத்தை கொள்வனவு செய்வதற்கு கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மகிந்த அரவீர மேலும் தெரிவித்தார். (அ)

## பூசகர்கள்...

உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பிரசித்தி பெற்ற வீரமாகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழா நேற்று முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருந்தது. ஆனால் ஆலயத்தின் மூன்று பூசகர்களிடையே முரண்பாடு ஏற்பட்டது.

இதையடுத்து, ஆலயத்தின் பெருந்திருவிழா தடைப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளை நடத்திய பொலிஸார் ஆலய கதவுகளை மூடி திறப்பை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

நீண்டநேரம் நடந்த வாதப் பிரதிவாதங்களை அடுத்து சிவதர்ச குருக்கள் தலைமையில் திருவிழாவை நடத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், திருவிழாவை குழப்புபவர்களை கைது செய்யுமாறும் நீதிவான் கட்டளை பிறப்பித்திருந்தார். (ஐ)

## நல்லிணக்க...

வுதல் மற்றும் தேசிய காணி கொள்கையை உருவாக்குதல், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தை மிகவும் திறம்பட செயல்படுத்துதல், அதன் டிஜிறறல் மயமாக்கல் செயல்பாடுகளை நிறைவு செய்தல் மற்றும் இதுவரை தகவல் சேகரிக்க முடியாத காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் பணிகளை விரைவுபடுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

அத்துடன், இழப்பீடுகளுக்கான அலுவலகம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் என்பவற்றை ஸ்தாபித்தல் மற்றும் அது தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு எதிர்வரும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் அவற்றைப் பூர்த்தி செய்து, அது தொடர்பான அறிக்கையை வழங்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்தார்.

இக்கலந்துரையாடலில், காணி பிரச்னைகளை தீர்ப்பதற்கான பொறிமுறைமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், இடம்பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றம், அரச துறையினரால் பயன்படுத்தப்படும் தனியார் காணிகளை விடுவித்தல், மகாவலி காணி தொடர்பான பிரச்னைகளுக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

கைதிகளின் விடுதலை மற்றும் பொதுமன்னிப்பு தொடர்பில் நீதி அமைச்சின் ஊடாக விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கம், மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் மாகாண ஒம்புட்ஸ்மன் நியமனம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம் மற்றும் தொடர்புடைய நிறுவன பிரதானிகள் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்ட செயலாளர்கள் மற்றும் கிழக்கு மற்றும் வடமாகாண காணி ஆணையாளர்கள் ஆகியோர் மெய்நிகர்வழியாக இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.

## டெங்கு...

றும் நியமிக்கப்பட் டுள்ளது.

சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தலைமையிலான இந்த நிபுணர் குழுவில் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சிறீ சந்திரகுப்த, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் எம். கொடிப்பிலியாராச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.எம். அர்னோல்ட், தொற்று நோய்கள் பிரிவு பணிப்பாளர் மருத்துவர் சமித்த கினிகே, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன, விசேட மருத்துவ நிபுணர் ஆனந்த விஜயவிக்ரம, சிறுவர் வைத்திய நிபுணர் மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ, நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு துறை பேராசிரியர் நீலிகா மாளவிகே, கலாநிதி உபுல் திஸாநாயக்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவின் இணைப்பாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் புத்திகா எஸ்.கமகே நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், இந்த நிபுணர் குழுவிற்கு உதவுவதற்காக மாகாண மட்டத்தில் 9 உப குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

மாகாண பிரதம செயலாளர் தலைமையிலான குழுவில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர், பிராந்திய சுகாதார பணிப்பாளர், உள்ளூராட்சி ஆணையாளர்கள், முப்படைகளின் உறுப்பினர்கள், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள், மாகாண பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கோவிட்-19 மற்றும் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அமைச்சர்கள் குழு நேற்று முற்பகல் பாராளுமன்றத்தில் குழுத் தலைவர் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில்கூடி சில முடிவுகளை எடுத்தது. (ஐ)

## யாழில்...

கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இது தவிர, பெற்றோருக்கு முதலில் விழிப்புணர்வு கருத்தமர்வுகளை தனியார் கல்வி நிலையங்களையும் இணைத்து மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு பிரதேச செயலக மட்டங்களில் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும், தரம் 9 வரையான மாணவர்களுக்கான பிரத்தியேக கல்வி நடவடிக்கை முற்றுமுழுதாக வெள்ளிக்கிழமைகளில் மாலையும் ஞாயிற்றுக்கிழமை முழுநேரமும் நிறுத்தப்பட வேண்டும்.

கல்வி நிலையங்கள் சுகாதார வசதி, வகுப்பறை பிரமாணம் அரச கட்டடத் திட்டம் போன்றவற்றுக்கு அமைய அமைந்திருக்க வேண்டும், ஆளுநர், கல்வி திணைக்களத்துடன் கலந்துரையாடி தனியார் கல்வி நிலைய வரையறை வெளியிடப்படும். அதற்குள் அடங்கும் கல்வி நிலையங்கள் உள்ளூராட்சி நிறுவனம், பிரதேச செயலகத்தில் பதிவு செய்தல் கட்டாயமாகும்.

தனியார் கல்வி நிலையங்கள் 15 தொடக்கம் 30 நிமிடம் வரை ஆன்மிகம், சமூகம் சம்பந்தப்பட்ட விடயங்களை போதிக்க வேண்டும், இந்த செயல்பாடுகள் ஒழுங்காக நடைபெறுதை அவதானித்து முன்னேற்றம் காணப்பட சுகாதாரத்துறை, பொலிஸ, மதம் சார் பிரதிநிதி, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், கல்விசார் துறையுடன் தனியார் கல்வி நிலையத்தினர் தமக்கென சங்கத்தை உருவாக்க வேண்டும். இதன் பின்னர், அனைத்து பிரதிநிதிகளையும் இணைத்து குழுவானது பிரதேச, மாவட்ட மட்டத்தில் உருவாக்கப்படும். இந்தத் தீர்மானங்கள் அனைத்தும் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் என்றும் தீர்மானிக்கப்பட்டன. (ஐ-03)

# தண்ணீர் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை

## அமைச்சர் ஜீவன்

கொழும்பு, ஜூன் 10

தண்ணீர் கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துளோம். என்றாலும் இந்த அதிகரிப்பின்போது சமுர்த்தி பயனாளிகள் மற்றும் அரசாங்கத்தின் நலன் புரி திட்டங்களுக்கு உட்பட்டோருக்கு நீர் கட்டணங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தண்ணீர் கட்டணத்தை நாங்கள் அதிகரிப்போம். தண்ணீர் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போதைய தண்ணீர் கட்டண அறவீடுகளின்படி ஒவ்வொரு மாதமும் 425 மில்லியன் ரூபாய் நட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. தொடர்ந்தும் இவ்வாறு செயல்பட முடியாது.

இந்தளவு பெரும் நிதி இருக்குமானால் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகி யிருக்கும் மலையக மக்களின் தேவைகளை பெற்றுக் கொடுக்க அதனை உபயோகப்படுத்த முடியும். அதேநேரம், தண்ணீர் கட்டணம் அதிகரிக்கும்போது நாங்கள் சமூர்த்தி பயனாளிகள் மற்றும் அரசாங்கத்தின் நலன் புரி திட்டங்களுக்கு உட்பட்டோருக்கு தண்ணீர் கட்டணங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. நீர் பாவனையாளர்களில் 20 சதவீதமானவர்களே இந்த தண்ணீர் கட்டண அதிகரிப்புக்குள் உள்வாங்குவார்கள்.

தண்ணீர் கட்டணம் அதிகரிப்பது தொடர்பில் நாங்கள் கடந்த 3 மாதங்களாக ஆராய்ந்து வருகின்றோம். இந்நிலையில் நேற்று (நேற்று முன்தினம்) ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய விசேட கலந்துரையாடல் ஒன்று எங்களுக்கும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்குமிடையில் இடம்பெற்றது. அதற்கு சாகல ரத்நாயக்க தலைமை தாங்கி இருந்தார். எவ்வாறெனினும் அந்த கலந்தரையாடலில் இருக்கும் நிலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சபையில் ஒரு கேள்வி கேட்டிருந்தார். அந்த கேள்விக்கான பதிலையும் சபைக்கு சமர்ப்பித்திருந்தேன்.

என்றாலும் நான் சபையில் இல்லாதமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் இருக்கும் ஒருவர், அது தொடர்பில் விமர்சித்துள்ளார். எங்களுக்கு பொறுப்பில்லை என தெரிவிப்பதற்கு இவர்களுக்கு எந்த தகுதியும் இல்லை. நாங்கள் வாக்குகளுக்காக இந்த அமைச்சை ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டை முன்னேற்றுவதற்காக எங்களால் முடிந்த சேவையை மேற்கொள்வதே எனது நோக்கம். அதனால் நான் எனது பொறுப்பை சரியாக செய்கிறேன் - என்றார். (ஐ)

## 3 நாடுகளின்...

கடிக்கு வித்திட்ட முதன்மை காரணியாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் இந்திய எண்ணெய் நிறுவனமும் (ஐ. ஓ. சி.) போதிய அந்நியச் செலாவணியை வழங்குவதற்கான இயலுமையை கொண்டிருக்கவில்லை என்பதாகும்.

இந்தியன் எண்ணெய் நிறுவனம் தேசிய வங்கிகள் மூலம் பெறப்பட்ட அந்நிய செலாவணியைப் பயன்படுத்தி , எண்ணெயை இறக்குமதி செய்துள்ளதாக அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேவையான அந்நியச் செலாவணி இருப்பை பாதுகாத்துக்கொள்வதற்கு குறித்த இரண்டு நிறுவனங்களுக்கும் முடியாமல் போயுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சினொபெக், ஆர். எம். பார்க்ஸ், யுனைற்றெட் பெற்றோலியம் ஆகிய நிறுவனங்களுக்கு நாட்டின் பெற்றோலிய சந்தைக்குள் பிரவேசிப்பதற்கு இந்த பின்புலத்திலேயே சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணம்...

ளுக்கு அவசியமாகவுள்ள உணவுப் பாதுகாப்பு, போஷாக்கு மற்றும் வாழ்வாதாரம் என்பவற்றை உயர்த்துவதற்கு வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களால் அடையாளப்படுத்தப்பட்ட பூர்வீகமான மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் விவசாய, நீர்வேளாண்மை உற்பத்திகளுக்கு ஏதுவான பிரதேசங்களும் விடுவிக்கப்பட வேண்டும் கடற்றொழில் அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும், 1985 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் மக்கள் குடியிருப்புகளாகவும் விவசாய நிலங்களாகவும் விளங்கிய பிரதேசங்கள் வனவளப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பின் அவை அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடும் சுட்டிகாட்டப்பட்டது.

அடையாளப்படுத்தப்பட்ட காணிகளில் கணிசமானவை விவசாய நிலங்களாகவும் குடியிருப்புக்களாகவும் இருந்தமைக்கான ஆவண ரீதியான ஆதாரங்களும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அதிகாரிகளால் இதன்போது சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், வனப் பகுதிகளும் வனஜீவராசிகளும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கின்ற போதிலும், விவசாய மற்றும் நீர்வேளாண்மை உற்பத்தியின் அவசியம் கருதியும் மக்களின் ஆபிலாசைகளை கருத்தில் கொண்டும், கணிசமானளவு காணிகளை விடுப்பதற்கான நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

## சிறீ லங்கா...

சார் மேற்பார்வைக் குழு தனது பரிந்துரையைக் கொண்டு வருவதற்கு முன்பே அரசாங்கம் சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் செல்ல முடிவு செய்துள்ளது. எனவே அரசாங்கம் அசல் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்” என்று அமைச்சர் கூறியுள்ளார்.

இதேசமயம், துறைசார் கண்காணிப்புக் குழுவின் தீர்மானத்தின் பிரதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. (ஐ)

## கனடா...

கொலை இடம்பெற்றது என்ற கனடாவின் தீர்மானத்தை கண்டிப்பதற்காக வெளிவிவகார அமைச்சு பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும். இதுதொடர்பில் தான் தனிநபர் பிரேரணையை கொண்டுவர திட்டமிட்டுள்ளார் என்றும் அவர் கூறினார்.

கடந்த வருடம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக பயணத்தடைகளை விதித்தது. ஆதாரங்கள் அற்ற யுத்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கனடா விதித்த பயணத் தடைக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் யுத்தத்தில் வெற்றிபெற்ற இராணுவத்தினருக்கு கடும் பாதிப்புகள் ஏற்படலாம்.

இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை சவாலுக்கு உட்படுத்தாமல் தொடர அனுமதித்தால் அது தனிநாடு அந்தக் கோரிக்கைகள் நியாயப்படுத்தப்படும் நிலையை ஏற்படுத்தும். இராணுவ அதிகாரிகள் நம்பிக்கை இழப்பார்கள், எதிர்கால யுத்தங்களில் அவர்கள் ஆர்வம் காட்டுவார்கள் என எதிர்பார்க்க முடியாது எனவும் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தனியார் கல்வி நிலையங்களை முடக்குவது எமது நோக்கமல்ல!

## யாழ். அரச அதிபர் சிவபாலசுந்தரன் விளக்கம்



யாழ்ப்பாணம், ஜூன் 10

**யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்களை முடக்குவதற்காகவோ அவர்களின் வருமானங்களை முடக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கல்வியில் சிறந்த மாவட்டமெனக் கூறிக்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்போமேயானால் யார் குற்றவாளி என்ற கேள்வி எழுகிறது என யாழ்.மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் இவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் ஏழு நாட்களும் ஓய்வின்றிக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் மாணவர்களுக்கும் சமுதாயத்துக்கும் ஏற்படும் சாதக மற்றும் பாதக விளைவுகளும் எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய தீர்மானங்களும் தொடர்பாக தனியார் கல்வி நிலையங்களுக்கான கலந்துரையாடலொன்று நடத்தப்படவுள்ளதாக மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டது. இதை ஒரு சில ஊடகங்கள் யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிலையங்களை நிறுத்துவதற்கான கலந்துரையாடலெனச் செய்தி வெளியிட்டிருந்தனர்.

இது யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்களை முடக்குவதற்காகவோ அவர்களின் வருமானங்களை முடக்குவதற்கோ எடுக்கப்படும் நடவடிக்கையோ கிடையாது.

அண்மையிலும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலை பண்பாடுகளை வளர்க்கும் நோக்கில் தனியார் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை வழங்கப்படவேண்டுமென தெரிவித்த கருத்து தொடர்பான செய்தியை சிங்கள ஊடகமொன்று செய்தியாக பிரசுரித்திருந்தது. எனவே இது தேசிய பிரச்னையாகக் காணப்படுகிறது.

குறிப்பாக இதனைச் சட்டங்கள், பிரேரணைகளை முன்வைத்து செயல்படுத்தமுடியுமென நான் நம்பவில்லை.

அதனுடன் தொடர்புடையவர்களை அழைத்து கலந்தாலோசித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இளம் அர்ச்சகர் போதை மருந்தேற்றி உயிரிழந்த செய்தி மற்றும் சிறுவர்களின் போதைப்பொருள் பாவனை தொடர்பான செய்தி கடந்த சில நாட்களாக வெளிவந்த வண்ணமுள்ளன.

கல்வியிலே சிறந்த மாவட்டமெனக் கூறிக்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்போமேயானால் யார் குற்றவாளி என்ற கேள்வி எழுகிறது.

நாம் சிறுபான்மையினமாக இருக்கின்றோம். கல்வியில் போட்டிகள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் கடந்து எவ்வாறு வெற்றிகரமான நடவடிக்கைளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். ஆகையால் இது சம்பந்தமான தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய தருணத்திலுள்ளோம்-என்றார். (அ)

# சரத் பொன்சேகாவுக்கு பதிலாக ரவூப் ஹக்கீம்

கொழும்பு, ஜூன் 10

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தேசிய பாதுகாப்புக்கான துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு நேற்று அறிவித்த பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, அந்த வெற்றிடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார். (அ)

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி!

முல்லைத்தீவு, ஜூன் 10

முல்லைத்தீவு - மல்லாவி வடகாட்டுப் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவமானது நேற்று முன்தினம் இரவுவேளையில் இடம்பெற்றுள்ளது.

52 வயதுடைய இராசையா கணேஷ்குமார் என்பவரே குறித்த தாக்குதலில் உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பொழுதுபோக்கு வழிமுறையின்மையே இளம்தலைமுறை வழி தவறக் காரணம்

## மருத்துவர் சிவதாஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 10

இளந் தலைமுறையினருக்கு பொழுதுபோக்குகளும், ஓய்வுநேரத்தை கழிப்பதற்கான வழிமுறைகள் இன்மையே தற்போது இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்புக்குக் காரணம் என வைத்திய கலாநிதி சிவதாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் இவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருளைத் தடுப்பதற்கு ஆறுதிருமுருகன் போன்றோர் அறிக்கை விடுவதும், வைத்தியர் சத்தியமூர்த்தி போன்றோர் இராணுவம் மற்றும் பொலிஸாரை அழைத்து போதைப்பொருட் பாவனையை ஒழிக்கப் போவதாக ஆரம்பித்துவிட்டு காலப்போக்கில் அந்தச் செயற்பாடுகளைக் காணமுடிவதில்லை.

முன்னைய காலத்தில் சமூகம் மிகுந்த பலமாக இருந்தாலும் தற்போது காணப்படும் சமூகம் மிகவும் பலவீனமானது. பாடசாலையுடனும் குடும்பத்துடனும் நல்ல இணைப்பிலுள்ள மாணவர்கள் எவ்விதமான பிறழ்வான நடத்தைகளுக்குள்ளும் அகப்படுவதில்லை.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு 175 இற்கும் மேற்பட்ட தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டிலிருந்து வரும் பணமும் பெருமளவான நடுத்தரவளவு குடும்பங்களின் பேராசைத் தன்மையுமே பெரும்பாலான பிரச்னைக்கு வழிவகுக்கின்றது - என்றார். (அ)

# பாடசாலைகளில் நிகழ்ச்சிகளுக்கு மாணவர்கள் சமுகமளிக்காத நிலை

## கல்வி நிலையங்களே காரணம் என்கிறார் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ராதா



யாழ்ப்பாணம், ஜூன் 10

பாடசாலைக் கல்வி என்பது செயல்திட்டமாக காணப்படுகின்றது. பாடசாலையில் முக்கியமான நிகழ்ச்சியின் போது மாணவர்கள் சமுகமளிக்காத நிலை காணப்படுகின்றது என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுவரும் கலந்துரையாடலில் இவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிகழ்வுகள் நடைபெறும் சம காலத்தில் கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் நடைபெறும் சந்தர்ப்பத்தில் மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகமளிக்காத நிலை காணப்படுகின்றது.

மேலதிக வகுப்புக்களுக்கு நிகராக எமது பணிப்பின் கீழ் பாடசாலைகளில் முக்கிய பாடங்களுக்கான மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தற்போது பிள்ளைகளிடம் வாசிப்பு பழக்கமின்மை நிலை காணப்படுகின்றது. இவற்றின் விளைவாகப் பரீட்சை வினாத்தாள்களில் வினாக்களை வாசிக்காது ஒப்புவித்த விடயத்தை விடையளிக்கின்றனர்.

தற்போது போதைப்பொருட் பிரச்னைகள் செய்திகளில் வெளிவந்த வண்ணமுள்ளன. பாடசாலை நிறைவுற்றபின் ஏற்படும் பிரச்னைகளுக்கு பெற்றோரே பெரும்பங்கு பொறுப்பாளராகின்றனர்.

கல்வி நிலையங்களுக்கு அனுப்புதலானது பராமரிப்பு நிலையத்திற்கு அனுப்புவதற்கு ஒப்பானது என எண்ணும் சமூகமும் காணப்படுகின்றது.

தற்போது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான இணைப்பு மிக விலகிய நிலையிலுள்ளது. மீண்டும் அதனை கட்டியமைக்கவேண்டும். இது போன்ற உரையாடலானது இவ்வாறான நடவடிக்கைகளுக்கான முயற்சியாக அமையும்-என்றார். (அ)

# கொழும்பு - அவிசாவளை வீதியில் வாகன விபத்து

## 22 பேர் காயம்

கொழும்பு, ஜூன் 10

கொழும்பு - அவிசாவளை வீதியில் எம்புல்கமவில் பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கிப் பயணித்த லொறி ஒன்று அக்கரைப்பற்றில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்கள் நவகமுவ மற்றும் ஹோமாகம வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# 17 வீதமானோர் வறுமையில்!

கொழும்பு, ஜூன் 10

மொத்த சனத்தொகையில் 17 சதவீத மக்கள் வறுமையால் பீடிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அண்ணளவாக 40 இலட்சம் பேர் அதாவது மொத்த சனத்தொகையில் 17 சதவீத மக்கள் வறுமையால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனவும், ஒன்பது மாகாணங்களிலும் இந்நிலைமை காணக்கூடியதாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் வறுமையில் வாடும் நிலைமையில் நைதரசன் உர மோசடி, மலக்கழிவு உர மோசடி போன்ற மோசடிகளில் ஈடுபட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் பிரதமரிடம் கோரிக்கை முன்வைத்தார். (அ)

# 16 மாணவிகள் துஷ்பிரயோகம் ஆசிரியருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 10

களுத்துறையில் 16 மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தனியார் வகுப்பு ஆசிரியர் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மே 11 ஆம் திகதி இந்த விடயம் தொடர்பான வாக்குமூலத்தை பதிவு செய்ய வந்த போது கைது செய்யப்பட்டார்.

கணவரின் மடிக் கணினியை ஆராய்ந்து பார்த்த போது, தனது கணவர் மாணவிகளுடன் உறவில் ஈடுபட்டதாக களுத்துறை வடக்கு பொலிஸில் மனைவி முறைப்பாடு செய்ததையடுத்து, சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதையடுத்து குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.